# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு I

## ஆசிரியர் பனுவல்

**Tamil**
**Standard I**
**Teacher Text**

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

# 1 கை கொடுப்போம்

**அலகு அறிமுகம்**

மனிதகுலம் கடைப்பிடிக்க வேண்டியவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றே மனிதநேயம். குழந்தைகளிடம் மனிதநேயம் வளர்வதற்காக, அனைவரிடமும் அன்புடன் பழகுவது, ஒருவருக்கொருவர் உதவி செய்வது, துன்புற்றோருக்கு உதவுவது, ஒற்றுமையாக இருப்பது போன்ற கருத்துகள் கிடைக்கும் வண்ணம் வினோதங்கள் / விளையாட்டுகள் இவற்றை மையக்கருவாகக் கொண்டு இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடல், கதை, குறிப்பு போன்ற மொழி வெளியீட்டு வடிவங்களின் வாயிலாக எழுத்துகள் / சொற்களை இனம் கண்டு வாசிக்கவும் எழுதவும் செய்கிறார்கள். பாடுதல், கலந்துரையாடுதல் போன்றவற்றின் வாயிலாகத் தங்களின் மொழித் திறன் வளரும் வாய்ப்புகளும் இவ்வலகில் தரப்பட்டுள்ளன.

இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளுக்கு சுமார் 40 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

# அலகு வலைச்சட்டம்

## 1. கை கொடுப்போம்

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| விளையாட்டு களும் வினோதமும் | நட்புணர்வு / பட்டம் விடுவோம் | பாடல் | • ஒருவருக் கொருவர் அன்புடன் பழக வேண்டும்.<br>• கூடி விளையாடுவது நட்பைப் பலப்படுத்தும்.<br>• பிறரது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கேற்பதே நல்ல நட்பு. | • பாடலை மெட்டமைத்துப் பாடுதல்.<br>• புதியச் சொற்களை இனம் காணுதல்.<br>• குறிப்பிட்ட எழுத்தை அடையாளம் கண்டு வாசித்தல்/ எழுதுதல்.<br>• வண்ணம் தீட்டுதல். | அனைவருடன் அன்புடன் பழக வேண்டும். | புதியச் சொற்கள் /எழுத்துகள் | ப, ட, ம, வ,<br>ப், ட், ம், வ்<br>பா, டா, மா, வா | • வாசித்தல்<br>• எழுத்துகளை இனம் காணுதல்<br>• வண்ணம் தீட்டுதல் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விளையாட்டு களும் வினோதமும் | உதவி செய்தல்<br>பகிர்ந்து உண்போம் | படக்கதை | • ஒருவருக் கொருவர் உதவி செய்ய வேண்டும்.<br>• துன்புற்றோருக்கு உதவி செய்யும்போது அவர்களின் மகிழ்ச்சியில் நாமும் பங்குபெற முடியும்.<br>• உதவி செய்யும் போது எதிர்ப்பார்ப்புகள் கூடாது. | • கேட்ட கதையைக் கூறுதல்<br>• கதாபாத்திரங் களாக மாறி நடித்தல்<br>• குறிப்பிட்ட சொல்லை இனம் காணுதல்<br>• குறிப்பிட்ட எழுத்தை வாசித்தல் / எழுதுதல்<br>• படத்தை உற்று நோக்குதல் | துன்பப் படுவோருக்கு உதவ வேண்டும் | புதியச் சொற்கள் / எழுத்துகள் | அ, ட | • கதை கூறுதல்<br>• நடித்தல்<br>• வாசித்தல்<br>• எழுதுதல் |
| விளையாட்டு களும் வினோதமும் | ஒற்றுமை<br>கூடி விளையாடு | கதை | • ஒற்றுமையாக வாழும்போது ஏராளமாக நன்மைகள் பெறலாம்<br>• பிறரை மதித்து நடப்பது ஒற்றுமையாக வாழ இன்றியமை யாதது | • படத்தை உற்றுநோக்கல்<br>• உரையாடுதல்<br>• எழுதுதல்<br>• கேட்ட கதையின் முடிவைக் கூறுதல் | ஒற்றுமை உயர்வைத் தரும் | எழுத்துகள்<br>சொற்கள் | ஆ<br>இ<br>கா<br>வீ<br>வி<br>கீ<br>கி<br>தி | • கலந்துரை யாடுதல்<br>• எழுத்துகளை இனம் காணுதல்<br>• வாசித்தல்<br>• எழுதுதல் |

## கற்றல் இலக்குகள்

- படத்தை வாசித்து சிறு சிறு வாக்கியங்களுக்கு விடையளிப்பதன் வாயிலாக கலந்துரையாடலில் பங்கேற்கிறார்கள்.
- பாடலை தனியாகவும் குழுவாகவும் மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- குறிப்பிட்ட சொற்களை இனம் காண்கிறார்கள்.
- குறிப்பிட்ட சொற்கள் எழுத்துக்களின் ஒலிப்பு முறை, வரிவடிவம் ஆகியவற்றை இனம் கண்டு வாசிக்கிறார்கள். எழுதுகிறார்கள்.
- கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்திப் பொருள் உள்ள சொற்களை உருவாக்குகிறார்கள்.
- "ா" என்ற ஒலித்துணைக் குறியீட்டு ஒலிப்புமுறையை அறிந்துசொற்கள் உருவாக்கி வாசிக்கிறார்கள்.
- படங்களுக்கு வண்ணம் தீட்டுகிறார்கள்.
- படக்கதையில் உள்ள படங்களை உற்றுக் கவனிக்கிறார்கள்.
- கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.
- கதையைக்கேட்டு நிகழ்வு மாறாமல் கதை கூறுகிறார்கள்.
- கதைக்குப் பொருத்தமானக் கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து கதாபாத்திரங்களாக நடிக்கிறார்கள்.
- படங்களைப் பார்த்து ஒவ்வொன்றின் பெயரையும் சரியான ஒலிப்புடன் கூறுகிறார்கள்.
- கற்ற எழுத்தைப் பயன்படுத்தி வேறு சூழலில் புதியச் சொற்களை உருவாக்குகின்றனர்.
- 'அ' என்ற எழுத்து வரும் சொற்களை இனம் காண்கிறார்கள்.
- படத்தைப் பார்த்து விடுபட்ட எழுத்தை நிரப்பி சரியான பெயரை எழுதுகின்றனர்.
- விளையாட்டுகளைப் பற்றிய கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.
- ஆமையும் முயலும் கதையைக் கேட்கின்றனர்.
- கேட்ட கதையைப் படக்கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.
- படக்கதையை உற்றுக் கவனித்து கதையைச் சரியாகக் கூறுகின்றனர்.
- பலவிதமான விளையாட்டுகளின் படங்கள் சேகரித்து ஒட்டுகின்றனர். படத்தொகுப்பு தயாரிக்கின்றனர்.

## இவ்வலகின் வாயிலாக...

| அறிமுகம் செய்யும் சொற்கள் | அறிமுகம் செய்யும் எழுத்துகள் |
|---|---|
| படம், பாப்பா, வா, அம்மா, | உயிரெழுத்துகள் : அ, ஆ |
| படம், வடம், பப்படம், மாமா, | மெய்யெழுத்துகள்: ட், ப், ம், ல் |
| ஆட்டம், ஆப்பம், ஆம்பல் | ஒலித்துணைக் குறியீடு : 'ா' |

## கற்றல் துணைக்கருவிகள்

- சொல்லட்டைகள், எழுத்தட்டைகள்.
- வண்ணப் பென்சில்கள், கிரையான்ஸ், சார்ட்.
- பட்டம் செய்ய தேவையான வண்ணக்காகிதங்கள், ஈர்க்குச்சி, பசை, கத்தரிக்கோல்.
- பதிவு செய்யப்பட்ட 'பட்டம் விடுவோம்' பாடல்.
- படங்கள் – 1 : நாட்டுப்புற / நவீன அவிளையாட்டுகள்.
  2: 'அ'. 'ஆ' வில் தொடங்கும் சொற்களின் படங்கள்.
- புள்ளிப்படங்கள், மணல்தடம்.
- ஆமையும் முயலும் படக்கதை சார்ட்.

### ஆசிரியர் கவனத்திற்கு....

- இவ்வலகில் மூன்று துணை அலகுகள் உள்ளன.
- மூன்று துணை அலகுகளிலும் வரும் கதைக்களத்தை வாசித்துக் கதையை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும்.
- கதையைச் சுவைபட கூறவேண்டும்.
- இவ்வலகில் தரப்பட்டுள்ள சொற்கள் / எழுத்துகளை அனைவரும் கற்றுள்ளனர் என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- அலகு முடிவடையும் போதும் குழந்தைகளின் செயல் ஏட்டை மதிப்பீடு செய்யவேண்டும்.
- பின்தங்கிய மாணவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

**நிகழ்வு – 1**
**பட்டம் விடுவோம்**

## ஆயத்தச் செயல்பாடு

### 1. கண்டுபிடித்தல்


ஒரு பெட்டியில் சில விளையாட்டுகளின் பெயர்கள் / படங்கள் துண்டு காகிதங்களில் எழுதி / ஒட்டிச் சுருட்டி போடுங்கள். குழந்தைகள் ஒவ்வொருவராக வந்து துண்டு காகிதத்தை எடுத்து அதில் வரும் விளையாட்டைச் சைகை மூலம் காண்பிக்க வேண்டும். பிற குழந்தைகள் விளையாட்டு எது என்று கண்டுபிடிக்க வேண்டும். (கால்பந்து விளையாட்டு, கபடி, கண்ணாமூச்சி, கோலிவிளையாட்டு, பட்டம் விடுதல், கிரிக்கெட்…)

### 2. பட்டம் விடுதல்

ஆசிரியர் முன்னரே சேகரித்து வைத்திருந்த வண்ணக்காகிதங்களைப் பயன்படுத்தி குழந்தைகளின் உதவியுடன் ஒரு பட்டம் வகுப்பறையில் உருவாக்க வேண்டும். உருவாக்கிய பட்டத்தை வகுப்பறைக்கு வெளியே சென்று பறக்க விடவேண்டும்.

பட்டம் செய்வது எப்பது?

ஒரு வண்ணக்காகிதத்தை எடுத்து குறிப்பிட்ட அளவில் சமசதுரமாக வெட்டியெடுங்கள்.



ஒரு மூலையிலிருந்து மறுமூலைக்கு ஓர் ஈர்க்குச்சியை வைத்து

காகிதத் துண்டுகளால் ஒட்ட வேண்டும். ஈர்க்குச்சி ஒட்டாத மறுமூலைகளில் வேறொரு ஈர்க்குச்சியை வளைத்து வைத்து ஒட்ட வேண்டும். குறிப்பிட்ட அளவில் பட்டத்திற்கு வாலை வெட்டி ஒட்ட வேண்டும். (படத்தில் காண்பித்தது போல்) பட்டம் தயார்.

## கதையோட்டம் – 1

ஆனந்தி என்ற ஒரு குழந்தை மிகவும் இரக்ககுணம் உள்ளவள். அவளுக்கு ஏராளம் நண்பர்கள் உள்ளனர். அவளுக்கு என்ன கிடைத்தாலும் தன் நண்பர்களுக்கும் கொடுப்பாள் ஒரு நாள்……

பள்ளி விடுமுறை 'இன்று நண்பர்களுடன் என்ன விளையாடலாம்?' ஆனந்தி ஆலோசித்தாள். அவள் தனது அப்பாவிடம் ஓடிச் சென்றாள். "அப்பா.. அப்பா… எனக்கு ஒரு பட்டம் செய்து தருவீர்களா?" ஆனந்தி கேட்டாள். "செய்து தருகிறேன். ஆனால், நீ எனக்கு உதவி செய்ய வேண்டும்" என அப்பா சொன்னார். "ஓ… செய்து தருகிறேன் அப்பா" எனச் சொல்லிக்கொண்டே அலமாரியில் இருந்து வண்ணக் காகிதம், பசை, ஈர்க்குச்சி, கத்தரிக்கோல் போன்றவற்றை எடுத்து தனது அப்பாவிடம் நீட்டினாள். ஆனந்தியின் அப்பா ஒரு பட்டம் செய்தார். 'அழகான வண்ணப்படம்' "எனக்கு மட்டும் தானா?" என் நண்பர்களுக்கும் வேண்டுமே எனக் கூறிக்கொண்டே அப்பாவைப் பார்த்தாள். அவளது குணம் நன்றாகத் தெரிந்த அவளது அப்பா பட்டம் செய்தார். பல தரப்பட்ட பட்டங்கள். ஆனந்தி துள்ளிக் குதித்து பட்டங்களை எடுத்துக்கொண்டு ஓடினாள்.

## செயல்பாடுகள்

### 1. கலந்துரையாடல்

**நோக்கம்: தன் அனுபவம் / கருத்தைக் கூறுதல்**

கிடைத்த பட்டங்களை ஆனந்தி என்ன செய்திருப்பாள்? என்ற வினா எழுப்ப வேண்டும்.

குழந்தைகள் ஒவ்வொருவராக தங்கள் கருத்துகளைக் கூறட்டும். குழந்தைகள் கூறுவதை சார்ட்டிலோ, கரும்பலகையிலோ எழுத வேண்டும். யார் கூறியது சரி என்று பார்ப்போமா என்று கூறி பாடப்பகுதிக்குள் நுழைய வேண்டும்.

### 2. பட வாசிப்பு

**நோக்கம்: படத்தை உற்றுக் கவனிக்கும் திறன் வளர்தல்**

ஆனந்தியும் நண்பர்களும் என்ன செய்கிறார்கள்? அவர்களைப் பார்க்க வேண்டாமா? என்று கேட்டு படத்தைப் பார்க்க தூண்டுங்கள். சில வினாக்கள் வாயிலாக படத்தை உற்றுக் கவனிக்கத் தூண்டுங்கள்.

- படத்தில் என்னென்ன பார்க்கிறீர்கள்?
- ஆனந்தியைத் தொட்டு காண்பியுங்கள்?
- படத்தில் எத்தனை பேர் உள்ளனர்?
- அவர்கள் என்ன செய்கிறார்கள்?
- எத்தனை குருவிக்குஞ்சுகள் உள்ளன?

குழந்தைகள் உற்றுக்கவனிக்கட்டும் படவாசிப்பு நடத்தட்டும்.

## 3. பெயர்களின் வரிவடிவம்

**நோக்கம்: தங்களது பெயரை எழுதுவதற்கு அறிந்து கொள்ளச் செய்தல்**

- படத்தில் யார் யார் உள்ளனர்? அவர்களின் பெயர்களை உங்களால் ஊகித்துக் கூற முடியுமா? என்று கேட்டு அவர்கள் கூறும் பெயர்களைச் சார்ட்டில் எழுதுங்கள்.
- குழந்தைகள் கூறும் பொழுது வகுப்பிலுள்ள மாணவர்கள் பெயர்களும் வருமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- குழந்தைகள் தங்களது பெயரைத் தொட்டுக் காண்பிக்க வேண்டும்.
- பின்தங்கிய குழந்தைகளின் பெயரைக் கண்டிப்பாக உட்படுத்த வேண்டும்.
- தங்களது பெயரின் வரிவடிவத்தை அறிந்து கொள்ள இச்செயல்பாடு உதவுகிறது.

### படவாசிப்பு

- வாசிப்பின் முதற்படியே படவாசிப்பு
- படவாசிப்பு குழந்தைகளின் உற்றுநோக்கல் திறனையும் சரளமாகப் பேசும் திறனையும் வளர்க்கும்
- ஒவ்வொரு பட வாசிப்பிலும் குழந்தைகளின் வளர்ச்சி நிலை காணப்பட வேண்டும்.
- (முதற்படியில் குழந்தைகள் சில சொற்களை மட்டும் குழந்தைகள் கூறினால் போதும். இறுதியில் குழந்தைகள் படங்களின் கருத்தைக் கூறுமாறு வளரவேண்டும்)

## 4. பாடலுக்கு மெட்டமைத்தல்

**நோக்கம்: பாடல் பாடுதல்**

- ஆசிரியர் பாடலை ஓரிருமுறை பாடிக் காண்பிக்க வேண்டும்.
- ஆசிரியர் பாட குழந்தைகளும் சேர்த்துப் பாட வேண்டும்.
- குழந்தைகளைக் குழுக்களாகப் பிரித்து பாடச் சொல்ல வேண்டும்.
- எந்தக் குழு சிறப்பாகப் பாடியது? என்பதைக் குழந்தைகள் கூறட்டும்.
- தனியாகப் பாட வைக்க வேண்டும்.

**பாடலைப் பலமுறை பாடுவது எப்படி?**

- முதலில் நான் பாடுகிறேன். யாரும் என்னுடன் சேர்ந்து பாட வேண்டாம். கவனித்தால் மட்டும் போதும் என்று கூறி பாடுதல்.
- நான் பாடுகிறேன். நீங்கள் சத்தம் வராமல் மனதிற்குள் பாடவேண்டும் எனக் கூறி பாடுதல்.
- ஆசிரியருடன் சேர்ந்து பாடுதல்.
- குழுவாகப் பாட வாய்ப்பளித்தல்.
- ஆளுக்கொரு வரி எனத் தொடர்முறையில் பாட வாய்ப்பளித்தல்.
- குறிப்பிட்ட சொற்களை இனம்காணப் பாடுதல்.
- குறிப்பிட்ட சொல் எத்தனை முறை வந்துள்ளது எனக் கண்டுபிடிக்கப் பாடுதல்.

**எழுத்து / சொல்லட்டைச் செயல்பாடுகள் செய்வதெப்படி?**

- குறிப்பிட்ட சொல்லைக் கூறும் போது சொல் அட்டையை எடுத்துக் காட்டுதல்.
- சார்ட்டில் எழுதும் சொல்லைப் பார்த்து சொல் அட்டையை எடுத்துக்காட்டுதல்.
- சார்ட்டில் எழுதியச் சொற்களை வரிசைப்படி சொல்லட்டைகளை அடுக்குதல்.
- சில குறிப்புகளுக்கு விடையாக வரும் சொல்லட்டையைத் தேர்ந்தெடுத்தல்.
- பட அட்டைகளுக்கு நிகரான சொல்லட்டையைத் தேர்ந்தெடுத்தல்.

## 5. சொற்களைப் பாடப்பகுதியில் வட்டமிடுதல்

**நோக்கம்: புதியச் சொற்கள் / எழுத்துக்களை அறிய**

- பாடலை ஓரிருமுறை பாடவேண்டும்.
- குறிப்பிட்ட சொற்களைக் குழந்தைகள் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து வட்டமிட வேண்டும்.
- குறிப்பிட்ட சொல் பாடலில் எத்தனை முறை வந்துள்ளது எனக் கூறட்டும்.
- வட்டமிட்ட சொல்லை வாசிக்க வேண்டும்.
- குறிப்பிட்ட சொல்லைச் சொல்லட்டைகளிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். (பட்டம், பாப்பா, வா)
- குறிப்பிட்ட சொல்லிலிருந்து குறிப்பிட்ட எழுத்தை இனம் காணவேண்டும்.
- எழுத்தட்டையிலிருந்து குறிப்பிட்ட எழுத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். (ப, ட, ம, வ)
- சொல்லட்டைகளிலிருந்து குழந்தைகள் குறிப்பிட்ட சொல்லைத் தேர்ந்தெடுத்தால் 'சொற்களை இனம் காணுதல்' திறனை பெற்றவராகக் கருதலாம். தொடர்மதிப்பீடு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- எழுத்தட்டைகளிலிருந்து குறிப்பிட்ட எழுத்தை தேந்தெடுத்தால் 'எழுத்துகளை இனம் காணுதல்' திறனை தொடர்மதிப்பீடு குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

## 6. பெயரைச் சொல்லுதல்

**நோக்கம்: படங்களின் எழுத்து வடிவம் அறிந்து கொள்ளுதல்**

- ஆசிரியர் சில படங்களைக் காண்பிக்க வேண்டும்.
- குழந்தைகள் படத்தைப் பார்த்து பெயரைக் கூறவேண்டும்.
- படமும் சொல்லும் வருமாறு அட்டைகளைக் காண்பிக்க வேண்டும்.
- படத்திற்குப் பொருத்தமான வரிவடிவத்தைப் பார்த்து ஊகமாக வாசிக்கட்டும்.
- படத்தையும் சொல்லையும் வேறுபடுத்தி வைக்க வேண்டும்.
- படத்திற்கு நிகரான சொற்களைத் தேர்ந்தெடுத்து இணைக்க வேண்டும்.
- இறுதியில் படமில்லாமல் சொல்லை வாசிக்க வேண்டும்.

## 7. வாருங்கள் என்னுடன்...

**நோக்கம்: விரல் அசைவுத் திறனை வளர்த்தல்**

- இது எழுத்து ஆரம்பிப்பதற்கான முன்பயிற்சி ஆகும்.
- அம்புக்குறி போகும் போக்கில் வரைய வேண்டும் எனக் குழந்தைகளுக்கு அறிவுறுத்துங்கள்.
- பாடப்பகுதியிலும் செயல்பாட்டு பனுவலிலும் தரப்பட்டுள்ள புள்ளிப்படங்கள் அனைத்தும் எழுத்திற்கான முன்பயிற்சியாகும்.

## 8. சொல்லிப்பழகுதல்

**நோக்கம்: ஒலித்துணைக் குறியீட்டை அறிதல்**

குறிப்பிட்ட உயிர்மெய்யெழுத்துகளில் புதிய ஒலித்துணைக் குறியீட்டைப் பயன்படுத்தும் போது வரிவடிவிலும் ஒலிப்பிலும் ஏற்படும் மாற்றங்களை அறிவதற்காகவே இச்செயல்பாடு அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் கற்ற எழுத்துகளான 'ப, ட, ம, வ' கரும்பலகையில் எழுதுங்கள். அவ்வெழுத்துகளில் ' ா' என்ற ஒலித்துணைக் குறியீட்டைச் சேர்த்து குறிலையும் நெடிலையும் மாறிமாறி வாசியுங்கள்.

ப – பா

ட – டா

ம – மா

வ – வா

குழந்தைகள் ஒலிப்பை உணர்ந்து வாசிக்க வேண்டும். மெய்யெழுத்தில் உண்டான மாற்றத்தையும் உறுதிப்படுத்த வேண்டும்.

### ஒலித்துணைக் குறியீடுகள் பயன்படுத்தும்போது…

மொழிக்கற்றலில் இது மிக முக்கியமான கட்டமாகும். எனவே, மிகவும் பொறுமையாக குழந்தைகள் உங்களுடனே வந்து கொண்டிருக்கிறார்கள் என்று கவனித்துக் கொண்டே செய்ய வேண்டும். எழுத்தின் வரிவடிவில் ஏற்படும் மாற்றம் ஒலிப்பிலும் ஏற்படுகிறது என்ற மிக முக்கியமான அடிப்படை விதியைக் குழந்தைகள் தாமே உருவாக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கிறோம் என்பதை மனதில் கொண்டு செய்யவேண்டும். புதிய எழுத்துகள் படிக்கும்போது கற்ற துணைக்குறியீடுகளை அவ்வப்போது பயன்படுத்தி செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும். இது ஒரு தொடர் செயல்பாடாகும். தொடர்ந்து செய்தால் மட்டுமே குழந்தைகளுக்கு ஒலித்துணைக் குறியீடு பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் தவறுகளைத் திருத்த முடியும்.

## 9. வாசித்தல்

**நோக்கம்: வாசிப்புத் திறனை வளர்த்தல்**

இதுவரை கற்ற உயிர்மெய்யெழுத்துக்களான ப, ட, ம, வ ஒலித்துணைக் குறியீடு பயன்படுத்தியப் பின் மெய்யெழுத்துகளான ப், ட், ம், வ் போன்ற எழுத்துகள் சேர்த்து உருவான சொற்களைக் குழந்தைகள் தாமாக வாசிக்க வேண்டும். சொற்கள் உருவாக்கியும் வாசித்தும் செய்யும் செயல்களைத் தொடர்மதிப்பீட்டுக் குறிப்பேட்டில் அடையாளப்படுத்த வேண்டும்.

## 10. வண்ணம் தீட்டுதல் பெயர் எழுதுதல்

**நோக்கம்: படம் வரையும் திறனை மேம்படுத்துதல்**

குழந்தைகள் சரியாக எழுதுவதற்கான முதற் பயிற்சியே படம் வரைதல். அவர்கள் கோட்டை விட்டு வெளியே செல்லாமல் பொருத்தமான நிறம் கொடுக்கிறார்களா என்பதை கவனிக்க வேண்டும். அதனடிப்படையில் தொடர் மதிப்பீட்டுப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். இதுவரை உறுதி செய்த சொல்லான 'பட்டம்' என்பதை எழுதுகிறார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**நிகழ்வு – 2**
**பகிர்ந்து உண்போம்.**

### கதையோட்டம்

நிகழ்வு – 1 ற்கான கதையோட்டத்தின் சுருக்கத்தைக் கூறியபின் நிகழ்வு – 2 ற்கான கதையோட்டத்தைத் தொடருங்கள்.

ஆனந்தி அனைவருக்கும் பட்டம் கொடுத்தாள். அனைவரும் மகிழ்ச்சியோடு பட்டம் விட்டனர். "ஹாய்... என் பட்டம் உயரத்தில் பறக்குது" ஆபேல் துள்ளிக்குதித்தான். "ஆமாம்.. ஆமாம்... ஆபேல் பட்டம்தான் உயரத்தில் பறக்குது என ஆமினாவும் சொன்னாள். "நூலை நன்றாகப் பிடி" என ஆனந்தி எச்சரித்தாள். அப்போது பலத்தக் காற்று வீசியது. அதோ... ஆபேலின் பட்டம் கீழே வருகிறது "நன்றாகப் பிடி" என ஆனந்தி உரக்கக் கூறினாள். ஆபேலின் பட்டம் கீழே வந்து மரத்தில் சிக்கியது. ஆபேல் அழ ஆரம்பித்தான். "அழாதே.. எடுத்துத்தருகிறேன்" என்று சொல்லி மரத்தை நோக்கி ஆமினா நடந்தாள். அப்போது கீ... கீ... கீ.. என்ற ஒரு சத்தம்.

கதையோட்டத்தைச் சுவைபட கூறியபின் அடுத்து என்ன நிகழ்த்திருக்கும் எனக் கேட்டுக் குழந்தைகள் கூறுவதற்கு வாய்ப்பளியுங்கள். அவர்கள் கூறியபின் நீங்கள் கூறியது சரிதானா என்று பார்ப்போம் எனக் கூறி பாடப்பகுதிக்குள் நுழையுங்கள்.

## செயல்பாடுகள்

### 1. படவாசிப்பு

**நோக்கம்: உற்று நோக்கும் திறனை வளர்த்தல்**

படத்தின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள். குழந்தைகளுக்குப் படத்தை உற்றுக் கவனித்து கருத்துகளைக் கூற போதிய நேரம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வாசிப்பிலும் குழந்தைகளின் வளர்ச்சி நிலையை தொடர் மதிப்பீடு செய்து தொடர் மதிப்பீட்டு பதிவேட்டில் குறிக்க வேண்டும். குழந்தைகளிடம் பட வாசிப்பைத் தூண்டுவதற்கான சிறுசிறு வினாக்கள் கேட்க வேண்டும். வினாக்களை முன்னரே தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள்.

### 2. கதை கூறுதல்

**நோக்கம்: கதை கூறும் திறனை மேம்படுத்துதல்**

படக்கதையை ஓரிரு முறை கூறுங்கள். கதை சொல்லுவதின் மூலம் குழந்தைகளிடம் சொற்களால் ஓர் அழகிய காட்சியைக் கொண்டு வருகிறோம். 'பகிர்ந்து உண்போம்' படக்கதையை சொல்வதைக் கேட்ட குழந்தைகளுக்குப் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வு உருவாக வேண்டும். அதற்கேற்ற முறையில் நாம் கதை சொல்ல வேண்டும்.

- சரியான குரல் ஏற்றதாழ்வு
- பொருத்தமான சைகைகள்
- பொருத்தமான முகபாவம்
- இடையிடையே கதையை நிறுத்திக் கேள்விகள் கேட்டு குழந்தைகளையும் கதையில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

### 3. பாட வாசிப்பு

**நோக்கம்: வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்**

படக்கதையை ஓரிருமுறை வாசியுங்கள். பலவித வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசியுங்கள். நான் வாசிக்கிறேன் நன்றாகக் கவனியுங்கள். நான் கூறும் சொல் பாடப்பகுதியில் எங்கெல்லாம் உள்ளன என நீங்கள் கண்டுபிடித்து வட்டமிட வேண்டும் எனக்கூறி வாசியுங்கள். மெதுவாக ஒவ்வொரு வாக்கியத்தையும் நிறுத்தி நிறுத்தி வாசியுங்கள். அதன்பின் 'அம்மா' என்ற சொல்லைப் பாடப்பகுதியில் வட்டமிடக் கூறுங்கள். 'அம்மா' என்ற சொல் பாடப்பகுதியில் எத்தனைமுறை வந்துள்ளன என்பதைக் குழந்தைகள் கண்டுபிடித்துக் கூறச் சொல்லுங்கள். 'அம்மா' என்று சார்ட்டில் பெரியதாக எழுதுங்கள். 'அ' என்ற எழுத்தை வாசிக்கவும் அதை எழுதவும் செய்ய வேண்டும்.

## 4. நடித்தல்

**நோக்கம்: கதாபாத்திரங்களை உட்கொண்டு நடிக்கும் திறனை வளர்த்தல்**

படக்கதையின் அடிப்படையில் குருவிக்குஞ்சுகள், குருவி கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமான குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து நடிக்கட்டும். நடிப்பின் அடிப்படையில் தொடர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

### தொடர் மதிப்பீடு

நாம் முக்கியத்துவம் அளித்த நோக்கங்களை அடைய தேவையான திறன்களை குழந்தைகள் பெற்றுள்ளார்களா என்று தொடர்ந்து மதிப்பிட வேண்டும். அம்மதிப்பீடு தொடர் கற்றலுக்கு வழிகாட்டியாக அமையும்.

வாசித்தல், எழுதுதல், படம் வரைதல், கலந்துரையாடலில் பங்கேற்றல், சரளமாகப் பேசுதல் போன்றவற்றை தொடர்மதிப்பீடு செய்வது மிகவும் அவசியம்.

## 5. வாருங்கள் என்னுடன்

**நோக்கம்: விரல் அசைவுப் பயிற்சி**

இது முன்னர் கூறியது போல் எழுத்து ஆரம்பிப்பதற்கான முன் பயிற்சி ஆகும்.

- மணல் தட்டில் வரைதல்
- காற்றில் வரைதல்

போன்றவையும் எழுத்திற்கான முன்பயிற்சி ஆகும். இச்செயல்பாட்டில் புள்ளிகள் வழியாக மாறாமல் எழுதுவதற்குப் பயிற்சியளித்தல் வேண்டும்.

## 6. 'அ' வில் தொடங்கும் பெயரைச் சொல்லுதல்

**நோக்கம்: குறிப்பிட்ட படங்களை உற்றுக்கவனித்து பெயர் கூறும் திறனை வளர்த்தல்**

'அ' வில் தொடங்கும் பெயர்கள் வரும் சொற்களின் படங்களைக் காண்பிக்க வேண்டும்.

குழந்தைகள் படத்தைப் பார்த்து பெயரைக் கூற வேண்டும்.

மேலும் இதை இருவர் குழு போட்டியாக நடத்தலாம்.

முதல் குழு: 'அ' வில் தொடங்கும் ஒரு பொருளைக் கூற வேண்டும்.

இரண்டாவது குழு: தொடர்ந்துக் கூற வேண்டும்.

எந்தக் குழுவினர் சொல்லவில்லையோ அப்போது எதிர்குழுவினர் வெற்றி பெற்றவராக அறிவிக்க வேண்டும்.

## 7. வாசித்தல்

**நோக்கம்: சொற்களைத் தாமாக வாசிக்கும் திறனை வளர்த்தல்**

இதுவரைக் கற்ற எழுத்துகள் பயன்படுத்தி உருவாகிய சொற்களைச் சுயமாக வாசிக்க வேண்டும். தொடர்மதிப்பீடு செய்து தொடர்மதிப்பீட்டுப் பதிவேட்டில் குறிக்க வேண்டும்.

## 8. விடுபட்ட எழுத்துகளை எழுதுதல்

**நோக்கம்: குறிப்பிட்ட எழுத்துகளை வேறுபடுத்தி அறியும் திறன்**

கற்ற சொற்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதும் செயல்பாடே இது. இதுபோன்று மேலும் கற்ற சொற்களில் விடுபட்ட எழுத்துகளை எழுதும் செயல்பாடுகள் செயல்பாட்டு ஏட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

**நிகழ்வு – 3**
**கூடி விளையாடு**

### கதையோட்டம்

ஆபேலின் பட்டத்தை எடுப்பதற்காக ஆமினா மரத்தினடியில் வந்தாள். மெல்ல மரத்தில் ஏற முயன்றாள். "கவனம்" ஆபேல் கூறினான். அப்போது 'கீ...கீ...கீ' என்ற என்ற குருவிக் குஞ்சுகள் கத்தின. ஆமினா மரத்திலிருந்து கீழே இறங்கினாள். "குருவிக் குஞ்சுகள் பயப்படுகின்றன என்ன செய்வது?" ஆமினா கூறினாள். அப்போது திடீரென காற்று வீசியது. மரத்திலிருந்து பட்டம் கீழே விழுந்தது. ஆமினா ஓடிச் சென்று பட்டத்தை எடுத்தாள். "அடடா… கிழிந்து விட்டதே!" ஆமினா கூறினாள். ஆபேல் அழ ஆரம்பித்தான்.

அடுத்து என்ன நிகழ்ந்திருக்கும்? என்று வினாவை எழுப்புங்கள். குழந்தைகள் தங்களது கருத்துகளைக் கற்பனையாகக் கூறட்டும்.

குழந்தைகள் கூறுவதைச் சார்ட்டில் எழுதுங்கள்.

யார் கூறியது சரியென்று பார்ப்போம் எனக் கூறி பாடப்பகுதிக்குள் நுழையுங்கள்.

## 1. படத்தை உற்று நோக்குதல்

**நோக்கம்: உற்று நோக்கி கருத்தைக் கூறும் திறனை வளர்த்தல்**

குழந்தைகள் படத்தை உற்றுக் கவனித்து தங்களது கருத்துகளைக் கூறட்டும். படத்தில் யாருடைய கையில் பட்டம் இல்லை?

ஆபேலின் கையிலுள்ள பட்டம் யாருடையது?

போன்ற சிறுசிறு வினாக்க கேட்கவேண்டும்.

## 2. பாடவாசிப்பு

**நோக்கம்: வாசிப்புத் திறனை வளர்த்தல்**

பாடப்பகுதியை ஓரிரு முறை வாசியுங்கள். வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வெவ்வேறு முறைகளில் வாசியுங்கள். 'ஆ' வில் தொடங்கும் பெயர்களை அடையாளம் காண்பதற்கான உத்திகளைப் பயன்படுத்தி வாசிக்க வேண்டும்.

## 3. 'ஆ' என்ற எழுத்தின் அறிமுகம்

**நோக்கம்: குறிப்பிட்ட எழுத்தை இனம் காணுதல்**

'ஆ' என்ற எழுத்தில் தொடங்கும் எத்தனை பெயர்களைச் கூறமுடியும்?

குழந்தைகளை இரு குழுக்களாக்குங்கள்

ஒவ்வொரு குழுவும் 'ஆ' வில் தொடங்கும் சொற்கள் / பெயர்கள் சேகரிக்கட்டும்.

போட்டி ஆரம்பிக்க வேண்டும். முதல் குழு 'ஆ' வில் தொடங்கும் ஒரு சொல்லைக் கூற வேண்டும். சார்ட்டில் ஆசிரியர் அதை எழுத வேண்டும். இரண்டாவது குழு வேறொரு சொல்லைக் கூற வேண்டும். ஒரு குழு சொன்ன சொல்லை அடுத்த குழு சொல்லக் கூடாது.

எந்தக் குழு கூடுதல் சொற்களைக் கூறியது? அக்குழு வெற்றி பெற்றதாகக் கூறவேண்டும்.

## 4. படத்தைப் பார்த்து பெயரைச் சொல்லுங்கள்

**நோக்கம்: படத்தையும் சொல்லையும் ஒப்பிடும் திறனை வளர்த்தல்**

குழந்தைகள் பாடப்புத்தகத்திலுள்ள படங்களைப் பார்த்து பெயரைச் சொல்லட்டும். முன் செயல்பாட்டில் அந்தச் சொல்லை எந்தக் குழு கூறியது? என்று கேளுங்கள். குழந்தைகள் சார்ட்டைப் பார்த்து கண்டுபிடித்துக் கூறட்டும்.

## 5. கலந்துரையாடல்

**நோக்கம்: குழந்தைகள் தங்கள் கருத்துகளைக் கூறும் திறனை வளர்த்தல்**

- உங்களுக்கு என்னென்ன விளையாட்டுகள் தெரியும்?
- உனக்குப் பிடித்த விளையாட்டு எது? ஏன்?
- வீட்டின் உள்ளே விளையாடும் விளையாட்டு எது?
- நாட்டுப்புற விளையாட்டுகள் எவை?
- நவீன விளையாட்டுகள் எவை?

போன்ற வினாக்கள் வாயிலாகக் கலந்துரையாடுங்கள். தேவையான படங்களைச் சேகரித்து வைக்க வேண்டும்.

## 6. எத்தனை எத்தனை விளையாட்டுகள்?

**நோக்கம்: பலதரப்பட்ட விளையாட்டுகளை அறிதல்**

படங்களைப் பார்த்து நாட்டுப்புற விளையாட்டுகள், நவீன விளையாட்டுகள் எது என்று குழந்தைகள் தாமாக அடையாளப் படுத்தட்டும்.

## 7. கதைநேரம்

**நோக்கம்: கதையைக் கேட்கவும் கூறவும் அறிதல்**

ஆமையும் முயலும் கதையைக் கூறுங்கள். (காணொளி மூலம் காண்பிக்கலாம்)

கேட்ட கதையைப் படங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கட்டும்.

கதையை முழுமையாகக் கூற வாய்ப்பளிக்க வேண்டும்.

கதை கூறும் பொழுது கவனிக்க வேண்டியவை

குரல் ஏற்றதாழ்வு

முகபாவம்

பொருத்தமான சைகை

## 8. பாடி மகிழ.....

**நோக்கம்: பாடலைப் பாடுதல்**

பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்

குழந்தைகள் பாடலைக் கேட்கட்டும்

கேட்ட பாடலைத் தனியாகவும் குழுவாகவும் பாடட்டும்

புதிய மெட்டமைத்துப் பாடட்டும்

ஐ.சி.டி. வாய்ப்புகளைப் பயன்படுத்துங்கள்.

பாடலைப்பாட பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துங்கள்

(பலவித உத்திகள் முன்னர் கொடுக்கப்பட்டுள்ளதைப் பாருங்கள்)

## 9. படத்தொகுப்புத் தயாரிப்போம்

குழந்தைகள் விளையாட்டுகளின் படங்களைச் சேகரித்து ஒட்ட வேண்டும்.

## செயல் ஏடு

குழந்தைகளின் பன்முகத்திறன்கள் வளர செயல் ஏட்டில் ஏராளம் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. படம் வரைதல்,வண்ணம் தீட்டுதல், விரல் அசைவு பயிற்சி, வெட்டுதல், ஒட்டுதல், சொற்கள் உருவாக்குதல், குறிப்பிட்ட எழுத்தை வேறுபடுத்தியறிதல் பலவித மொழி விளையாட்டுகள் போன்ற செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் அலகில் 14 செயல்பாடுகள் உள்ளன. அவற்றைக் குழந்தைகள் தாமாக செய்ய வேண்டும். ஒவ்வொரு செயல்பாட்டையும் உறுதி செய்துள்ளார்கள் என்பதை மதிப்பிட வேண்டும்.

# 2 வண்ணங்களின் கொண்டாட்டம்

## அலகு அறிமுகம்

உழைப்பவர்களின் மகிழ்ச்சியே திருவிழாக்கள். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அவ்வட்டாரத்திற்கே உரித்தான விழாக்கள் உண்டு. இவ்விழாக்களில் பல்வேறு கலை வடிவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. சமூகம் மற்றும் குடும்ப உறவுகள் மேம்படுவதற்கும் கலை, பண்பாடு வளர்ச்சியிலும் விழாக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்ற அடிப்படையில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடல், படக்கதை, குறிப்பு போன்ற மொழி வெளியீட்டு வடிவங்கள் வாயிலாக எழுத்துகள் / சொற்கள் போன்றவற்றை இனம் காண்பதற்கும் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் அதுபோன்று கலந்துரையாடலில் பங்கேற்று தங்களது கருத்துகளை வெளியிடுவதற்கும் குழந்தைகளின் கலைத் திறனை வளர்ப்பதற்கும் இவ்வலகில் எளிமையான செயல்பாடுகள் தரப்பட்டுள்ளன.

இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளுக்கு சுமார் 40 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

# அலகு வலைச்சட்டம்

## 2. வண்ணங்களின் கொண்டாட்டம்

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| கலையும் பண்பாடும் | திருவிழா | பாடல் | ஒவ்வொரு வட்டாரத்திலும் வேறுபட்ட திருவிழாக்கள் நடைபெறு கின்றன.<br><br>திருவிழாவின் பொழுது மக்கள் ஒன்றுகூடி மகிழ்கிறார்கள்.<br><br>திருவிழாக்களின் பொழுது பல்வேறு பொருட்கள் விற்பனைச் செய்யப்படு கின்றன. | பாடலை மெட்டமைத்துப் பாடுதல்<br><br>புதியச் சொற்களை இனம் காணுதல்<br><br>குறிப்பிட்ட சொல்லை எழுத்தை அடையாளம் கண்டு எழுதுதல் / வாசித்தல் | விழாக்களும் கலைகளும் சமூக ஒற்றுமையை மேம்படுத்துபவை.<br><br>கலையையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். | புதிய சொற்கள் / எழுத்துகள் | ச ங<br>ர, ரா, ர்<br>கு<br>ளை<br>லை<br>ண்<br>க், ச், த்<br>க | • பாடும் திறன்<br>• சொற்களை அடையாளம் காணும் திறன்.<br>• சரியான ஒலிப்புடன் வாசிக்கும் திறன். |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கலையும் பண்பாடும் | கலை<br>கரகாட்டம் | செய்திக் குறிப்பு | திருவிழாக்களில் நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படு கின்றன.<br>ஒவ்வொரு நாட்டுப்புறக் கலைக்கும் அதற்கே உரித்தானச் சிறப்புகள் உண்டு.<br>கலைகளும் விழாக்களும் பண்பாட்டின் அடையாளங்கள் ஆகும். | கலைகள் தொடர்பான குறிப்பை வாசிக்கிறார்கள்.<br>குறிப்பில் வரும் புதியச் சொற்களையும் எழுத்துகளையும் அடையாளம் காண்கிறார்கள்.<br>ஒலித்துணைக் குறியீடுகளை அறிந்து சரியான ஒலிப்போடு வாசிக்கிறார்கள். | கலைகள் சமூக ஒற்றுமையை மேம்படுத்துபவை.<br>கலைகளைப் பாதுகாக்க வேண்டும். | சொற்கள்<br>எழுத்துகள் | பொ<br>செ<br>டை<br>நா<br>ல்<br>லா<br>ழ<br>ள<br>ய<br>ஃ<br>டை<br>கை<br>மை<br>வை<br>தை | • கலந்துரை யாடும் திறன்<br>• வாசிக்கும் திறன்<br>• அடையாளம் கண்டு எழுதும் திறன் |
| கலையும் பண்பாடும் | குடும்ப விழாக்கள்<br>புத்தம் புது வீடு | படக்கதை | வீடுகளில் குடும்பங்களில் பல விழாக்களும் நடைபெறுவது உண்டு.<br>குடும்ப விழாக்களில் உறவினர்களும் பங்கெடுப்பது உண்டு.<br>குடும்ப விழாக்களில் விருந்து, பரிசு வழங்குதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். | படத்தை உற்று நோக்கி கலந்துரையாடலில் பங்கெடுத்தல்<br>சுயக் கருத்தை கூச்சமின்றி வெளியிடுதல்<br>புதிய எழுத்துகள் ஒலித்துணைக் குறியீடுகள் போன்றவற்றை அடையாளம் கண்டு பயன்படுத்துதல் | வீட்டில் நடைபெறும் விழாக்கள் உறவுகளை மேம்படுத்த உதவுகின்றன.<br>வீட்டு விழாக்களால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. | புதிய சொற்கள்<br>எழுத்துகள் | கீ ய்<br>தீ டு<br>பீ தி<br>சீ<br>யீ சி<br>வீ<br>மீ | • கலந்துரை யாடும் திறன்<br>• வாசிக்கும் திறன்<br>• எழுதும் திறன்<br>• வரைந்து வண்ணம் தீட்டும் திறன் |

## கற்றல் இலக்குகள்

- திருவிழா தொடர்பான பாடலைத் தனியாகவும் குழுவாகவும் பாடுகின்றனர்.
- பாடலைப் புதிய மெட்டமைத்துப் பாடுகின்றனர்.
- திருவிழா தொடர்பானக் கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.
- திருவிழா தொடர்பாக வரும் புதிய சொற்களை இனம் கண்டு வாசிக்கின்றனர்.
- குறிப்பிட்ட சொல் / எழுத்தை அடையாளம் கண்டு வாசிக்கின்றனர் / எழுதுகின்றனர்.
- படத்தை உற்று நோக்கி கலந்துரையாடலில் பங்கு பெறுகின்றனர்.
- திருவிழா தொடர்பான படங்களைப் பார்த்துப் பெயர்களைக் கூறுகின்றனர்.
- கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி புதியச் சொற்கள் உருவாக்குகின்றனர்.
- திருவிழா தொடர்பானப் படத்தை உற்றுக் கவனித்து அதில் உள்ளவற்றைக் கூறுகின்றனர்.
- தான் கண்ட திருவிழா காட்சியுடன் ஒப்பிட்டுக் கூறி கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.
- இசைக்கருவிகளின் பெயர்களைக் கூறுகின்றனர்.
- படங்களைத் திரட்டி ஒட்டுகின்றனர்.
- ி, ை ஒலி துணைக் குறியீடுகளின் ஒலிப்பை அறிகின்றனர்.
- கற்ற எழுத்துக்களில் புதிய ஒலித்துணைக் குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான ஒலிப்புடன் வாசிக்கின்றனர்.
- குறிப்புகளின் அடிப்படையில் விளையாட்டு பொருளான பலூன், கிலுகிலுப்பையைச் செய்கின்றனர்.
- படங்களைப் பார்த்து பெயரைக் கூறுகின்றனர் / எழுதுகின்றனர் .
- இதுவரை கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கிய சொற்களை வாசிக்கின்றனர்.
- படக்கதையை உற்று நோக்கி நிகழ்வுகளைக் கூறுகின்றனர் .
- தனது வீட்டில் நடைபெற்ற விழாக்களைப் பற்றி கலந்துரையாடி தங்கள் கருத்துகளைக் கூறுகின்றனர்.
- புதியச் சொற்களை வாசிக்கின்றனர் / எழுதுகின்றனர்.
- கற்ற சொற்களைப் பயன்படுத்தி உருவாக்கிய எளிய வாக்கியங்களைப் பிழையின்றி வாசிக்கின்றனர்.
- புதியச் சொற்களை உருவாக்குகின்றனர்.
- படம் வரைந்து வண்ணம் தீட்டுகின்றனர்.
- கேட்ட கதையைப் படக்கதையுடன் ஒப்பிடுகின்றனர்.
- பாடலைக் கேட்கின்றனர். குழுவாகப் பாடுகின்றனர்.

## இவ்வலகின் வாயிலாக...

**அறிமுகமாகும் சொற்கள்**

சக்கரம் சங்கு சப்பரம்

தச்சன் இலை தவளை

ரம்பம் கண் தங்கம்

விழா

**எழுத்துகள்**

உயிர் எழுத்துகள் : இ, ஈ

மெய் எழுத்துகள் : க், ங், ச், த், ர்

உயிர்மெய் எழுத்துகள் : ச ர கு ரா லை ளை

ஒலித்துணைக் குறியீடுகள் – ்ீ, ை

## கற்றல் துணைக்கருவிகள்

- பலூன்
- வண்ணக் காகிதங்கள்
- ICT (பல்வேறு Slide கள்)
- சொல்லட்டைகள் / எழுத்தட்டைகள்
- இசைக்கருவிகளின் மாதிரிகள்
- நாட்டுப்புறக் கலைகளின் படங்கள்

  (கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம்)

### ஆசிரியர் வகுப்பறையில் நுழைவதற்கு முன்

இவ்வலகிற்கான கதையோட்டத்தை வாசித்துக் கதையை முழுமையாக உட்கொள்ள வேண்டும்.

வகுப்பில் பயன்படுத்தத் தேவையான பல வண்ணங்களிலான பலூன்கள், தோரணங்கள், முத்துக்குடைகள் போன்ற மாதிரிகளை ஆசிரியர் உருவாக்கி வைத்திருக்க வேண்டும்.

இவ்வலகில் அறிமுகமாகும் சொற்கள் (சக்கரம், சங்கு, சப்பரம், பஞ்சு, மஞ்சள், திருவிழா முதலிய படங்கள் மற்றும் சொல்லட்டைகளை முன்கூட்டியே ஆசிரியர் தயாரித்து வைக்க வேண்டும்.

ICT பயன்படுத்தி பாடல்களைக் காண்பிப்பதற்கு வசதியாக முன்கூட்டியே காட்சித்தொகுப்புகள் (Slide) செய்து வைக்க வேண்டும்.

ஏதாவது ஒரு திருவிழாக் காட்சியைக் காணொளியாகத் தயாரித்து வைத்திருக்க வேண்டும்.

**நிகழ்வு – 1**
**திருவிழா**

## ஆயத்தச் செயல்பாடு

உங்கள் அனைவருக்கும் பாடல் விருப்பம் தானே? நாம் அனைவரும் சேர்ந்து உடலசைவுகளோடு ஒரு பாடலைப் பாடுவோமா? எனக் கேட்டுக் கீழேயுள்ள பாடலைப் பாடுங்கள். உங்கள் உடலசைவுகளைப் பார்த்துக் குழந்தைகளும் உடலசைவுகளோடு பாடட்டும்.

**பாடல்**

செண்டை மேளம் அடிப்பது எப்படி?
சொல்லு தம்பி சொல்லு – நீ (2)
தம்பட தம்பட தம்பட (3)

நாதஸ்வரம் வாசிப்பது எப்படி?
சொல்லு தம்பி சொல்லு – நீ (2)
பிப்பிறி பிப்பிறி பிப்பீ (3)

ஜால்ராவை அடிப்பது எப்படி?
சொல்லு தம்பி சொல்லு நீ (2)
சை சக்காங் சை (3)

பாடலை உடலசைவுகளுடன் பாடிய பின் நிகழ்வு ஒன்றிற்கான கதையோட்டத்தைச் சுவைபட கூறுங்கள்.

### கதையோட்டம்

தமிழரசியின் அப்பா செல்வம் பக்கத்து வீட்டு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தார். தமிழரசி வேகமாக ஓடிவந்து தன் கையில் வைத்திருக்கும் இரண்டு சட்டைகளை அப்பாவிடம் காண்பித்தாள். "அப்பா….. இதில் எந்தச் சட்டையை நான் திருவிழாவிற்குப் போடுவது…?" என்று கேட்டாள். அப்பா மெதுவாக அவளிடம் "நீ அம்மாட்ட கேளும்மா" என்றார். "அம்மா நீயாவது சொல்லும்மா…. திருவிழாவிற்கு நான் எந்தச் சட்டையைப் போடுவது...?" எனத் தமிழரசி கெஞ்சினாள். நீ நீல நிறச்சட்டையைப் போடு, தம்பியும் அதே நிறம் போட்டிருக்கான் பாரு, அம்மா கவிதா சிரித்துக்கொண்டே சொன்னாள். "சரி..சரி.. சீக்கிரமாகக் கிளம்பு. தாத்தா, பாட்டி எல்லோரும் கிளம்பிட்டாங்க பாரு". "அம்மா, அப்பா நம்ம புது வீடு பால்காய்ச்சும் போது சிவப்புச் சட்டையைப் போட்டுக்கவா?" தம்பி எதைப்போடுவான் அவனுக்குச் சிவப்புச் சட்டை இல்லையே. தமிழரசி மீண்டும் கேட்டபடி நின்றாள். "அவன் பச்சை சட்டையைப் போட்டுக்குவான். நீ பேசிட்டே நின்னா திருவிழாவில் எல்லாம் முடிஞ்சிடும். வேகமாக கிளம்பு" அம்மா அவசரப்படுத்தியதும் தமிழரசி தலையை ஆட்டிக்கொண்டு ஓடினாள்.

# செயல்பாடுகள்

## 1. கலந்துரையாடல்

**நோக்கம்: தன் அனுபவத்தைக் கூறுதல்**

"எனக்குத் திருவிழா மிகவும் பிடிக்கும்.

ஏன் என்று சொல்ல முடியுமா?" குழந்தைகளிடம் கேளுங்கள்.

குழந்தைகள் தமக்குத் தெரிந்தவற்றைச் சுதந்திரமாக கூற வாய்ப்பளியுங்கள். (பலூன், தோரணங்கள், செண்டைமேளம், தோரணங்கள், பட்டாசு முதலிய வெடிகள்…..) பிறகு " உங்களுக்குத் திருவிழாப் பிடிக்குமா?" என்று கேளுங்கள். குழந்தைகள் கூறட்டும். அதற்குப் பிறகு நம்மைப்போல தமிழரசிக்கும் திருவிழா மிகவும் பிடிக்கும். எனவே, தமிழரசி குடும்பத்தினருடன் ஊர்த்திருவிழா காணச் சென்றாள். ஊர் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. தமிழரசி கண்ட காட்சிகளைக் கண்டு இரசித்தாள். தமிழரசி கண்ட திருவிழா காட்சிகளைப் பார்ப்போமா? என்று குழந்தைகளிடம் கேட்டுக்கொண்டே பாடப்பகுதிக்குள் நுழையுங்கள்.

## 2. படத்தை உற்று நோக்கல்:

**நோக்கம்: படங்களை உற்று நோக்கி புரிந்துக் கொள்ளுதல்.**

பா.நூ. பக்கம் 22, 23 இல் உள்ள படங்களைப் பார்க்கட்டும். சில வினாக்களைக் கேட்டு படத்தை உற்று நோக்க உதவலாமே.

படத்தில் என்னென்ன உள்ளன?

ஆசிரியர் குழந்தைகள் கூறுவதைக் கரும்பலகை, விளக்க அட்டைகளில் எழுதுதல்.

நீங்கள் உங்களுக்குப் பிடித்த திருவிழாவைப் பற்றியும் அத்திருவிழா பிடித்தமைக்கான காரணத்தையும் கூறுங்கள். அதன்பின் குழந்தைகள் அவர்களுக்குப் பிடித்த திருவிழா பற்றியும் அதற்கான காரணத்தையும் கூறுவார்கள்.

படத்தில் என்னென்ன உள்ளன?. எனக் கேட்டு ஆசிரியர் குழந்தைகள் கூறுவதை கரும்பலகையிலும் விளக்க அட்டையிலும் எழுத்துகளை உரக்கச் சொல்லிக்கொண்டே எழுத வேண்டும். (பலூன், சங்கு, சப்பரம், சங்கு, தோரணம், இராட்டினம்).

தமிழரசி திருவிழாக்காட்சிகளைப் பார்த்து இரசித்ததோடு ஒரு பாடலையும் பாடினாள். நாமும் அப்பாடலைப் பாடுவோமா? என்று கூறி ஆசிரியர் ICT பயன்படுத்தி பா.நூ. பக்கம் 23 ஐ காண்பியுங்கள்.

## 3. திருவிழாப் பாடல்

**நோக்கம்: பாடலை இசையோடு பாடுதல்**

தனியாகவும் குழுவாகவும் பாடுதல்

ஊக வாசிப்பு

பாடலைக் குழந்தைகள் தாமாக வாசிக்க வாய்ப்பளித்தல்

(இதற்காக இப்பாடலை ஆசிரியர் ICT பயன்படுத்தி காண்பித்தல் வேண்டும்)

## 4. உரையாடுதல்

நீங்கள் திருவிழா பார்த்திருக்கிறீர்களா?

நீங்கள் திருவிழாவில் என்னென்ன பார்த்தீர்கள்?

தமிழரசி என்னென்ன பார்த்தாள்?

திருவிழாவில் உங்களுக்குப் பிடித்தது எது?

போன்ற கேள்விகளைக் கேளுங்கள்.

## 5. தோரணங்கள் உருவாக்குதல்

**நோக்கம் : எல்லாக் குழந்தைகளின் திறன்களும் தனித்தன்மைகளும் வளர்வதற்கு/ பணி அனுபவக் கல்வி வழங்குதல்.**

பல வண்ணங்களிலான கிராப்ட் தாள்களைப் பயன்படுத்தி தோரணங்கள் உருவாக்கி வகுப்பறையை அலங்கரித்தல். தாளின் நான்கு பக்கங்களும் சம அளவில் இருக்க வேண்டும். தொடர்ந்து மூலைக்கு மூலை வெட்ட வேண்டும். இதை நூலில் ஒட்டி தோரணங்கள் உருவாக்க வேண்டும்.

## 6. படத்தைப் பார்த்து பெயர் கூறுதல்

**நோக்கம்: படத்தை உற்று நோக்கல்**

படத்தை உற்று நோக்கியதன் அடிப்படையில் சொற்களை அறிந்துக் கொள்ளுதல். கண்டறிந்தச் சொற்களின் பெயர்களைக் கூறட்டும். குழந்தைகள் கூறிய சொற்களின் அடிப்படையில் கரும்பலகையில் எழுத வேண்டும். வாசிப்பு உத்திகளின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் வாசிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

## 7. வட்டமிடுதல்

குறிப்பிட்டச் சொற்களைக் கூற அச்சொல்லைப் பாடப்பகுதியில் கண்டுப்பிடித்து வட்டமிட வேண்டும். (எ. கா.) சக்கரம் என்று ஆசிரியர் கூற மாணவர்கள் வேகமாகத் தேடட்டும். யார் முதலில் வட்டமிட்டார்களோ அவர்களைப் பாராட்ட வேண்டும். அவ்வாறு விளையாட்டுத் தொடர வேண்டும்.

## 8. புள்ளிகளை இணைத்து வாசித்தல்

**நோக்கம்: வரிவடிவம் எழுதும் முறையை அறிதல்**

அம்புக்குறிபோகும் போக்கில் வரைய வேண்டும் என்று அறிவுறுத்துங்கள்

## 9. சொற்கள் உருவாக்குதல்

**நோக்கம்: எழுத்துகளைச் சரியாக வரிசைப்படுத்தி சொற்கள் உருவாக்கும் திறனை வளர்த்தல்**

கீழ்க்காணும் சொல்லட்டைகள் தயாரியுங்கள்

சக்கரம் சப்பரம் தங்கம் தச்சன்

ஆசிரியர் இந்தச் சொற்களுக்குத் தேவையான எழுத்துகளைத் தனித்தனியாக எழுதிய அட்டைகளை மாணவர்களுக்குக் கொடுத்து யார் மிகவும் சீக்கரமாக எழுத்துகளைக் கண்டுபிடித்து சக்கரம், சப்பரம் சட்டம் வட்டம் தங்கம் போன்ற சொற்களை உருவாக்குகிறார்களோ அவர்களுக்கு 3 நட்சத்திரங்கள் கொடுங்கள்.

## 10. முதல் எழுத்தை வட்டமிடுதல்

**நோக்கம்: கற்ற சொற்களின் மூலம் எழுத்துகளை இனம் காணுதல்**

ச, த என்ற எழுத்துகளை உறுதி செய்வதற்காக இச்செயல்பாட்டை வழங்கவேண்டும். ஒரே எழுத்தில் தொடங்கும் சில சொற்களைச் சார்டில் எழுதுங்கள். அதிலிருந்து குறிப்பிட்ட சொல்லைக் குழந்தைகள் கண்டுபிடிக்கவேண்டும். கண்டு பிடித்த சொல்லிலிருந்து முதல் எழுத்தை வட்டமிட்டு சரியான ஒலிப்புடன் வாசிக்க வேண்டும்.

## 11. வாசித்தல்

**நோக்கம்: ஏற்கனவே கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி புதியச் சொற்கள் உருவாக்குதல்.**

கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதியச் சொற்களை வாசிக்க வேண்டும். மேலும் எழுத்துப் பெட்டியில் இருந்து எழுத்துகளைத் தேர்ந்தெடுத்து புதியச் சொற்கள் உருவாக்கி வாசிக்கவும் எழுதவும் வேண்டும். பலவிதமான புதியச் செயல்பாடுகளை வகுப்பறையில் செய்து குழந்தைகள் புதியச் சொற்களை உருவாக்குகிறார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**நிகழ்வு – 2**
**கரகாட்டம்**

## ஆயத்தச் செயல்பாடு

இவ்வலகின் தொடக்கத்தில் பயன்படுத்திய இசைக் கருவிகள் தொடர்பான உடலசைவுப் பாடலை மீண்டும் பாடச் செய்ய வேண்டும். ஆயத்தச் செயல்பாடுகள் இதுதான் வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஆசிரியர்கள் புதிய ஆயத்தச் செயல்பாட்டை உருவாக்க முழுச் சுதந்திரம் உண்டு.

### கதையோட்டம்

திருவிழாவில் தமிழரசியும் தம்பி இன்பனும் நண்பர்களுடன் வேடிக்கைப் பார்க்கிறார்கள் எங்கும் அழகான காட்சிகள், கண்ணுக்கு விருந்தாகும் காட்சிகளில் அனைவரும் மகிழ்கிறார்கள். சுற்றிலும் பலவித விளையாட்டுகளும் கலைநிகழ்ச்சிகளும் நிகழ்கின்றன. அப்போது ஒலி பெருக்கியில் ஓர் அறிவிப்பு கேட்கிறது. அந்த அறிவிப்பு என்னவாக இருக்கும்? என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.

பா.நூ. பக்கம் 24, 25 பார்க்கச் சொல்ல வேண்டும்.

## செயல்பாடுகள்

### 1. படத்தை உற்றுநோக்கல்

**நோக்கம்: பாடப்பகுதியிலுள்ள படத்தை உற்று நோக்குதல்**

மாணவர்கள் சுதந்திரமாக படத்தைப் பார்த்து அதிலுள்ள காட்சிகளைக் கூற வாய்ப்பளிக்க வேண்டும். காட்சிகளைச் சிறுசிறு வாக்கியங்களாகக் கூற ஊக்குவிக்க வேண்டும்.

நாட்டுப்புறக் கலைகள் குறித்து கேள்வி எழுப்பி அக்கலைகளுள் 'கரகாட்டம்' கலை பற்றிய பதில் வருமாறு சில வினாக்களைக் கேட்க வேண்டும்.

தமிழரசி கலந்துகொண்ட திருவிழாவில் என்ன கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது?

### 2. கலந்துரையாடல்

**நோக்கம்: திருவிழாக்களில் பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன எனபதை அறிதல்.**

கலந்துரையாடலுக்கான வினாக்களைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.

- திருவிழாவின் போது என்னென்ன இசைக்கருவிகள் வாசிப்பார்கள்?
- வேறு என்னென்ன கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்?

அனைத்துக் குழந்தைகளும் கலைகளை அறிந்து கொள்வதற்காக குழந்தைகள் சொல்லும் கலைகளை ஆசிரியர் ICT பயன்படுத்தி காண்பிக்க வேண்டும். (செண்டை மேளம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், பாட்டுக்கச்சேரி, கரகாட்டம்) தொடர்ந்து மாணவர்கள் கூறும் கலைகளை ஆசிரியர் கரும்பலகை மற்றும் விளக்க அட்டையில் எழுத வேண்டும்.

நீங்கள் ஏதேனும் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்ததுண்டா?

என்னென்ன நிகழ்ச்சிகள் பார்த்தீர்கள்?

போன்ற வினாக்களை எழுப்பி குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள். குழந்தைகள் உரையாடட்டும்.

## 3. பாடவாசிப்பு

**நோக்கம்: பாடப்பகுதியை வாசிக்கும் ஆர்வத்தை மாணவர்களிடம் தூண்டுதல்**

ஆசிரியர் பா. நூ. பக்கம் 25 இல் உள்ள பாடப்பகுதியைப் பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி 2 அல்லது 3 முறை வாசிக்க வேண்டும். பாடப்பகுதியை வாசிக்கும் பொழுது ஒவ்வொரு சொற்களையும் தொட்டுக் காண்பித்து வாசிக்கவேண்டும். பலவித வாசிப்பு உத்திகள் முன் அலகில் தரப்பட்டுள்ளன.

## 4. உரையாடுங்கள்

**நோக்கம் : மாணவர்கள் தன் சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளைக் கவனித்து பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் கருத்துகளை ஆசிரியரோடு உரையாடுதல்.**

இச்செயல்பாட்டை நடத்தும்போது கவனிக்க வேண்டியவை

பல்வேறு திருவிழாக்களின் படங்கள் வேண்டும்

பல்வேறு இசைக்கருவிகளின் படங்கள் வேண்டும்

கரகாட்டம் தொடர்பான கரகம், கிளி பொம்மை, கரகாட்டம் ஆடும் படங்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைக்க வேண்டும்.

## 5. இசைக்கருவிகளை அறிதல்

**நோக்கம்: பல்வேறு இசைக்கருவிகளைத் தெரிந்து கொள்ளுதல்**

- திருவிழாவில் என்னென்ன இசைக் கருவிகள் பயன்படுத்துவார்கள்?
- கரகாட்டத்திற்கு என்னென்ன இசைக்கருவிகள் பயன்படுத்துவார்கள்?
- பாட்டுக் கச்சேரிக்கு என்னென்ன இசைக்கருவிகள் பயன்படுத்துவார்கள்?

போன்ற வினாக்களை எழுப்பி மாணவர்களோடு உரையாடுங்கள் ஆசிரியர் பல்வேறு இசைக்கருவிகளின் படங்களையும் அதன் பெயர்களையும் ICT

பயன்படுத்திக் காண்பிக்க வேண்டும். அதன்பின் பாடப்பகுதியிலுள்ள செயல்பாட்டை குழந்தைகள் தாமாகச் செய்ய வேண்டும். பின்தங்கிய மாணவர்களுக்கு ஆசிரியர் உதவியுடன் படங்களைச் சேகரித்து ஒட்ட வைக்க வேண்டும். இதன் வழி மாணவர்கள் இசைக்கருவிகளின் பெயர்களை இனங்கண்டு படங்களைச் சேகரித்து ஒட்டட்டும்.

## 6. வட்டமிடுங்கள்

**நோக்கம்: கற்ற சொற்களை இனங்காணுதல்**

மாணவர்கள் பாடப்பகுதியில் அவர்கள் கற்ற சொற்களை வட்டமிடச் சொல்லி அச்சொற்களைச் சரியாக அடையாளம் காணுகிறார்களா? என்பதை உறுதிப்படுத்தவும்.

## 7. பலூன் கிலுகிலுப்பை செய்வோம்

**நோக்கம்: குழந்தைகளின் படைப்பாற்றல் திறன் வளர்ச்சிக்கு உதவுதல்**

பா.நூ. பக்கம் 26 இல் உள்ள பலூன் கிலுகிலுப்பைச் செய்வதற்கு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். இதற்கு முன் ஆசிரியர் செய்து பார்த்திருக்க வேண்டும்.

## 8. அடிக்கோடிடுதல்

**நோக்கம்: 'ஈ' என்ற புதிய எழுத்தை இனம் காணுதல்**

'ஈ' என்ற எழுத்தை எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் அடையாளம் கண்டுபிடிப்பதற்கும் ஈட்டி, ஈசல், ஈச்சரம், ஈ போன்றவற்றின் படங்களையும் சொல்லட்டைகளையும் பயன்படுத்த வேண்டும்.

'ஈ' என்ற எழுத்து வரும் சொற்களை அடிக்கோடு இடுங்கள். செயல்பாட்டைச் செய்வதற்கு ஆசிரியர் அறிவுறுத்தல் வேண்டும்.

## 9. ஒலித்துணைக் குறியீடுகள்

**நோக்கம்: புதிய ஒலித்துணைக் குறியீடுகளை அறிந்து எழுத்துகளை வாசிக்கவும் எழுதவும் செய்யும் திறனை வளர்த்தல்.**

ஆசிரியர் கரும்பலகையில் ໆ, ை என்ற ஒலித்துணைக் குறியீடுகளை எழுத வேண்டும். குழந்தைகள் இதுவரைக் கற்ற உயிர்மெய் எழுத்துகளை எழுதி ஒரு பெட்டியில் போட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் பெட்டியில் இருந்து ஓர் எழுத்தை எடுக்க வேண்டும். அதை ஒலித்துணைக் குறியீட்டில் பொருத்தி அந்த எழுத்தை சரியான ஒலிப்புடன் வாசிக்க வேண்டும். வாசித்தப்பின் அந்த எழுத்தை எழுதட்டும்.

## 10. மொழி விளையாட்டுகள்

**நோக்கம்: மொழி விளையாட்டுகள் வழி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தல்**

மாணவர்களை 2 அல்லது 3 குழுவாகப் பிரித்து விளையாடச் செய்தல்

ஆசிரியர் மயில், பொய்க்கால் குதிரை, கரகம் என்ற படங்களும் ஆட்டம் என்று எழுதிய சொல்லட்டையும் தயாரித்து வைக்க வேண்டும். பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், கரகாட்டம் என்று எழுதிய சொல்லட்டைகளையும் தயாரித்து வைக்க வேண்டும்.

இச்செயல்பாட்டிற்கான மாதிரிகளை ஆசிரியர் ஒரு விளக்க அட்டையில் ஒட்ட வேண்டும்.

மயில் (படம்) + ஆட்டம்= மயிலாட்டம்

பொய்கால் குதிரை (படம்) + ஆட்டம் = ……………..

## 11. கிளி பொம்மை

ஏற்கெனவே ஆசிரியர் உருவாக்கிய கிளி பொம்மையை மறைத்து வைத்து நாம் ஏற்கெனவே கற்ற எழுத்துகளை சொற்களை விளக்க அட்டையில் எழுதி வைக்க வேண்டும்.

எ. கா. ப க ச த ம ட

இந்த எழுத்துகளை மாணவர்கள் கூற வாய்ப்பளிக்கவேண்டும் முதலில் கூறிய குழந்தைக்கு ஆசிரியர் ஏற்கெனவே உருவாக்கியுள்ள கிளி பொம்மையைப் பரிசாக கொடுக்க வேண்டும். (பரிசுப் பெட்டிக்குள் வைத்து) பரிசுப் பெட்டியைப் பிரித்து பரிசுப் பொருட்களைப் பிற குழந்தைகளுக்குக் காண்பிக்க அறிவுறுத்த வேண்டும். பரிசுப் பொருளின் பெயரை யார் கரும்பலகையில் எழுதுவீர்கள்? என்று கேட்டு எழுதச் செய்தல். (கிளி பொம்மை) என எழுதச் செய்தல். இதன் சரியான ஒலிப்பை உச்சரிக்கச் செய்தல்.

## 12. ஒலித்துணைக்குறியீடு அறிவோம்

குறிப்பிட்ட ஒலித்துணைக் குறியீடுகளைப் பயன்படுத்திய சொற்களை ஆசிரியர் குறிப்பு அட்டையில் (Slide show) காண்பிக்க வேண்டும். பெயரைக் குழந்தைகள் சொல்ல வேண்டும். எ.கா. கிளி, பொம்மை, சிப்பி, கொட்டு …….. குழந்தைகள் பெயரைக் கூறுவதோடு அதை எழுதவும் வேண்டும்.

இதுபோன்று பிற ஒலித்துணைக் குறியீடுகளை உறுதி செய்யவும், இவ்வாறு செய்யலாம்.

## 13. வாசிப்போம்

**நோக்கம்: மாணவர்களைத் தாமாக வாசிக்க வாய்ப்பளித்தல்**

குழந்தைகள் தான் கற்ற உயிர் எழுத்துகளான அ, ஆ, இ, ஈ, ஐ முதலியவற்றைச் சரியாக உறுதி செய்துள்ளார்களா? எனக் கவனிக்க வேண்டும்.

இல்லையெனில் மேலும் இது தொடர்பான செயல்பாடுகளைக் கொடுக்க வேண்டும்.

**நிகழ்வு: 3**
**புத்தம் புதுவீடு**

## கதையோட்டம்

திருவிழாவில் நண்பர்கள் அனைவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். டேவிட் சுபைதா நீங்கள் உங்களது அப்பா, அம்மாவுடன் நாளை எங்க புதுவீட்டுக்குக் காலையிலே வந்திருங்க.." என்றாள். 'கண்டிப்பா வந்துருவோம். உங்க அப்பாவும் அம்மாவும் எங்க வீட்ல வந்து சொன்னாங்க. புது வீட்டின் போட்டோ காட்டுனாங்க ரொம்ப அழகா இருந்துச்சு.." என்றான் டேவிட். "ஆமாம்.. ஆமாம் நாங்களும் பார்த்தோம். மிகவும் அழகாக இருந்தது. உங்க அப்பா அழைப்பிதழும் கொடுத்தாங்க. நாங்க எல்லோரும் ஒன்னா வாரோம் என்றாள் சுபைதா. நாளை ஞாயிற்றுக்கிழமை தமிழரசியின் புதுவீட்டில் ஆடிப்பாடி விளையாடலாம் என்ற குதுகலத்தோடு அனைவரும் விடைபெற்றார்கள்.

கதைக்களத்தின் அடிப்படையில் வினாக்கள் கேட்டு உரையாடி பொருத்தமான வேளையில் பாடப்பகுதிக்குள் நுழையுங்கள்.

## செயல்பாடுகள்

1. **படத்தை உற்றுநோக்குதல்**

**நோக்கம்: படங்களை உற்று நோக்கிப் புரிந்துகொள்ளுதல்**

சில வினாக்களைக் கேட்டுப் படத்தை உற்றுநோக்க உதவலாம்.

தமிழரசியின் புதுமனைப் புகுவிழாவிற்கு நண்பர்கள் மட்டுமா வந்திருப்பார்கள்?

தமிழரசியின் வீடு எப்படி இருந்தது?

தமிழரசியின் அப்பா, அம்மா எங்கே இருக்கிறார்கள்?

வீட்டிற்கு வந்த நண்பர்கள் விருந்தினர்களிடம் என்ன சொல்லியிருப்பார்கள்?

தமிழரசியின் குடும்பமும் டேவிட்டின் குடும்பமும் என்னென்ன பேசியிருப்பார்கள்?

(குழந்தைகள் சுதந்திரமாகச் சிந்தித்து பதிலளிக்க வாய்ப்பளித்தல்)

## 2. பாட வாசிப்பு

**நோக்கம்: குழந்தைகளின் வாசிப்புத் திறனை வளர்த்தல்**

பாடப்பகுதியை ஆசிரியர் வாசிக்க வேண்டும். மௌனவாசிப்பு, உரக்க வாசிப்பு, சே..சே.. வாசிப்பு, தனிநபர் வாசிப்பு, சொற்களைத் தொட்டு வாசித்தல் போன்ற பலவித வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசிக்க வேண்டும்.

## 3. நாடகம் நடித்தல்

**நோக்கம்: மாணவர்களின் நடித்தல் திறன் வளர்த்தல்**

பாடப்பகுதி நிகழ்வை வகுப்பிலுள்ள குழந்தைகளை நடிக்கச் செய்தல் வேண்டும். இதற்காக மாணவர்களில் தமிழரசி, டேவிட், டேவிட்டின் அப்பா, அம்மா, சுபைதா, தமிழரசியின் அப்பா, அம்மா என்று 8 பேர் அடங்கிய குழுவை நடிக்கச் செய்தல் வேண்டும்.

## 4. உரையாடுங்கள்

**நோக்கம்: வீடுகளில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களின் மூலம் குடும்ப உறவுகள் வலுப்பெறுகின்றன என்ற கருத்தை வலியுறுத்தல்.**

இச்செயல்பாட்டிலுள்ள கேள்விகளைக் கேட்டு ஆசிரியர் விழாக்களைப் பற்றிய கலந்துரையாடலில் குழந்தைகளை ஈடுபடச் செய்ய வேண்டும். அவர்கள் கூறும் விழாக்களின் பெயர்களைக் கரும்பலகை/விளக்க அட்டையில் எழுத வேண்டும்.

(பிறந்தநாள் விழா, காதணி விழா, பெயர் சூட்டு விழா, திருமண விழா)

## 5. வட்டமிடுதல்

பாடப்பகுதியில் வீடு, பாயசம் என்ற சொற்களை வட்டமிட வாய்ப்பளிக்க வேண்டும்.

வீடு, பாயசம் என்ற சொல் எத்தனை முறை வந்துள்ளது? வட்டமிடுங்கள் என்று அறிவுறுத்த வேண்டும்.

## 6. சொல்லிப் பழகுதல்

**நோக்கம்: ஒலித்துணைக் குறியீட்டை 'ீ' தான் கற்ற எழுத்துக்களில் பயன்படுத்தி சொல்லிப் பழக வேண்டும்.**

மாணவர்கள் சொல்வதை ஆசிரியர் பதிவு செய்து கேட்க செய்தல்.

கீரை சீடை பீப்பி தீபம் மீதி சீட்டு

கீ, சீ, பீ, தீ, மீ, டை

ரை ட் டு தி ப ம் ப் பி

போன்ற எழுத்தட்டைகளைத் தயாரித்து மாணவர்களிடம் புதிய சொற்களை உருவாக்கி வாசிக்கச் சொல்ல வேண்டும். சிறப்பாக வாசிப்பவர்களைப் பாராட்ட வேண்டும்.

இதைப்போன்று ஏற்கனவே கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்களைக் கண்டடைவோர்க்கு 3 புள்ளிகளுள்ள நட்சத்திரம் கொடுக்க வேண்டும்.

## 7. வாசிப்போம்

**நோக்கம்: மாணவர்களைச் சுயமாக வாசிக்க வைத்தல்**

கற்ற சொற்களை இனம் காண்கிறார்களா? என்பதை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.

## 8. வாசிக்கிறேன்…… கேளுங்கள்……

**நோக்கம்: மாணவர்கள் தாமாக வாசிக்க ஆர்வத்தைத் தூண்டுதல்**

சுய வாசிப்பின் மூலம் தாங்கள் ஏற்கெனவே கற்ற எழுத்துக்களை மாணவர்களிடையே உறுதிப்படுத்த வேண்டும்.

## 9. சொற்களை உருவாக்குதல் வாசித்தல்

**நோக்கம்: சொற்சூரியன் பயன்படுத்தி புதியச் சொற்களை உருவாக்குதல்.**

கரும்பலகையைப் பயன்படுத்தி ஆசிரியர் இச்செயல்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டும். இதன் வழி மாணவர்கள் சுயமாக பா. நூ. பக்கம் 31 லுள்ள இச்செயல்பாட்டை செய்ய வேண்டும்.

## 10. படம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்

**நோக்கம்: வண்ணம் தீட்டுதல்**

புள்ளிகளை இணைத்து வீட்டின் படத்தை முழுமையாக்கட்டும். அதன்பின் பொருத்தமான வண்ணம் தீட்டி குறிப்பிட்ட கட்டத்தில் 'வீடு' என்று எழுத வேண்டும்.

## 11. கதை நேரம்

**நோக்கம்: கதை கூறுதல்**

- ஆசிரியர் குரங்கும் குல்லா வியாபாரியும் என்ற கதையைக் கூற வேண்டும். (குரல் ஏற்றத் தாழ்வு, முகபாவனை போன்றவை வேண்டும்)
- அதன்பிறகு படக்கதையை வெளியிட வேண்டும்.
- குழந்தைகள் படக்கதையைக் கேட்ட கதையுடன் ஒப்பிட வேண்டும்.
- பின்பு படக்கதையின் அடிப்படையில் குழந்தைகள் கதையைக் கூற வேண்டும்.

## 12. பாடி மகிழ: யானைப் பாடல்

**நோக்கம்: பாடலைப் பாடி மகிழ்தல்**

கலந்துரையாடல்

திருவிழாவில் என்னென்ன பார்த்தோம்?

யானை எவ்வாறு அலங்கரிக்கப்பட்டுள்ளது?

கோவில் யானையை நீங்கள் நேரில் பார்த்ததுண்டா?

யானை பற்றிய பாடல் யாருக்காவது தெரியுமா?

(குழந்தைகளுக்குத் தெரிந்த பாடலைப் பாட வாய்ப்பளிக்க வேண்டும்)

சரியாகப் பாடும் மாணவர்களைப் பாராட்ட வேண்டும்.

ICT பயன்படுத்தி குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களைக் குறித்த குறிப்பை மாணவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். (வலையொளி காட்சி)

பாடலைப் பாடுதல்

ஆசிரியர் பாடலை மெட்டமைத்துப் பாட வேண்டும். மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் பாடலைப் பாட வேண்டும். குழுக்களில் புதிய மெட்டமைத்து வெளியிட வேண்டும்.

## செயல்பாட்டு ஏடு

இவ்வலகிற்கான அதிகச் செயல்பாடுகள் செயல் ஏட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தாமாக செயல் ஏட்டிலுள்ள செயல்பாடுகளைச் செய்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பின்தங்கிய குழந்தைகளுக்கு வழிகாட்டுதல் அவசியம்.

# 3 ஆகா என்ன அழகு

**அலகு அறிமுகம்**

இயற்கை மனிதர்களுக்குக் கிடைத்த பெரும் வரம். பசுமையான காடுகளும் உயர்ந்தோங்கிய மலைகளும் செழிப்பான வயல்களும் வளமான கடல்களும் ஏராளமான பயன்களைத் தருபவை. இயற்கை அள்ளித் தந்த கண்ணைக் கவரும் பூக்கள், காய்கறிகள், பழங்கள், விலங்குகள், தாவரங்கள், பறவைகள் முதலியவற்றைக் குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ளும்படி இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பூக்கள், காய்கறிகள், வளர்ப்பு விலங்குகள் என்ற மூன்று துணை அலகுகளின் வாயிலாக புதியச் சொற்கள் / எழுத்துகள் போன்றவற்றை இனம் கண்டு வாசிக்கவும் எழுதவும் கலந்துரையாடலில் பங்கேற்று தங்களது கருத்துகளைக் கூறவும் செய்கிறார்கள். மட்டுமின்றி பல்வேறு மொழி விளையாட்டுகளில் பங்கேற்று தங்களது மொழித்திறனை வளர்க்க உதவும் விதத்தில் இவ்வலகு அமைந்துள்ளது.

இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளுக்கு சுமார் 35 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

# அலகு வலைச்சட்டம்

## 3. ஆகா என்ன அழகு!

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப் பான்மைகள் | | | |
| சுற்றுச்சூழல் | பூந்தோட்டம் | பாடல் | பூந்தோட்டத்தில் ஏராளம் பூக்கள் மலர்கின்றன.<br><br>பூக்கள் நிறம், மணம், வடிவம் ஆகியவற்றில் வேறுபட்டவை யாக உள்ளன.<br><br>பூக்களைப் பல தேவைகளுக் காகவும் பயன்படுத்து கின்றோம். | பூந்தோட்டம் தொடர்பான பாடலைக் குழுவாகவும் தனியாகவும் மெட்டமைத்துப் பாடுதல்<br><br>பூக்களின் சிறப்புத்தன்மை களை அறிதல்<br><br>பூக்களின் பெயர்களைக் கூறுதல் / அடையாளம் காணுதல் சரியான ஒலிப்புடன் வாசித்தல் | பூக்களால் பல நன்மைகளும் உள்ளன.<br><br>வீட்டில் பூந்தோட்டம் அமைப்பது மகிழ்ச்சியைத் தரும். | புதியச் சொற்கள், எழுத்துகள். | டா<br>பூ<br>ற<br>னு<br>க<br>உ<br>தே<br>லே<br>மே<br>யு<br>ளு<br>யை<br>ண | அடையாளம் காணும் திறன்<br><br>கலந்துரையாடும் திறன்<br><br>பூக்களின் பெயர்களைக் கூறும் திறன்<br><br>வண்ணம் தீட்டும் திறன் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுச்சூழல் | காய்கறித் தோட்டம் / வீட்டுத் தோட்டம்<br>வெள்ளைப் பசுவின் தோட்டம் | செய்திக் குறிப்பு | நாம் வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை வளர்க்கிறோம்.<br>காய்கறிகள் மற்றும் பழங்களின் சுவை, வடிவம் போன்றவை வேறுபட்டவை.<br>செடி, கொடி போன்றவற்றில் காய்கறிகள் விளைகின்றன. | வாசிப்புப் பகுதியைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்<br>புதியச் சொற்களை இனம் காணுதல்<br>காய்கறிகள் மற்றும் பழங்களின் பெயர்களைக் கூறவும் எழுதவும் செய்தல்<br>சிறப்புகளின் அடிப்படையில் காய்கறிகளை அட்டவணைப் படுத்துதல் | வீட்டுத் தோட்டத்தில் விளையும் காய்கறிகள் உடல் ஆரோக்கியத்தைத் தருகின்றன.<br>வீட்டுத் தோட்டம் அமைத்துக் காய்கறிகளைப் பயிர் செய்ய வேண்டும். | புதியச் சொற்கள்<br>எழுத்துகள் | சு ண<br>ஊ<br>வெ ழு<br>றி<br>நி ழ<br>பு ளி<br>ரி | • வாசிக்கும் திறன்<br>• கலந்துரையாடும் திறன்<br>• எழுதும் திறன்<br>• முழுமை செய்த அட்டவணை |
| சுற்றுச்சூழல் | வளர்ப்பு விலங்குகள்<br>"புள்ளிக் கன்று" | செய்திக் குறிப்பு | வீடுகளில் பல தேவைகளுக்காகவும் உயிரினங்களை வளர்க்கிறோம்.<br>காட்டில் பல உயிரினங்கள் வசிக்கின்றன.<br>உயிரினங்களால் நமக்குப் பல நன்மைகளும் உள்ளன. | படத்தைக் கவனித்துக் கருத்துகளைப் புரிந்துக்கொள்ளுதல்<br>வாசிப்புப் பகுதியில் இருந்து புதியச் சொற்கள் / எழுத்துகளை அடையாளம் காணுதல்<br>வீட்டிலும் காட்டிலும் வசிக்கும் உயிரினங்களின் பெயர்களை அறிதல்<br>விலங்குகளைச் சிறப்புகளின் அடிப்படையில் அட்டவணைப் படுத்துதல் | விலங்குகளையும் மற்றும் உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டும். | புதியச் சொற்கள் / எழுத்துகள் | சூ, மூ<br>பெ, ரு<br>லை<br>னை<br>நா, ழ<br>ழி, கோ<br>ளு, ழு<br>ழ், ள்<br>து | • கலந்துரையாடும் திறன்<br>• அட்டவணை<br>• வாசிக்கும் / எழுதும் திறன் |

## கற்றல் இலக்குகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுகின்றனர்.
- குழுவாகவும் தனியாகவும் பாடலுக்குப் புதிய மெட்டமைத்துப் பாடுகின்றனர்.
- குறிப்பிட்ட சொற்களை அடையாளம் கண்டு வாசிக்கின்றனர்.
- குறிப்பிட்ட எழுத்துக்களை அடையாளம் கண்டு வாசிக்கின்றனர் / எழுதுகின்றனர்.
- படத்தைப் பார்த்து சொற்களைச் சரியான ஒலிப்புடன் கூறுகின்றனர்.
- பூக்களின் பெயர்களைக் கூறுகின்றனர்.
- நிறங்களின் அடிப்படையில் பூக்களை வகைப்படுத்துகின்றனர்.
- பூக்களுக்கு வண்ணம் தீட்டி அழகுப் படுத்துகின்றனர்.
- புதியச் சொற்கள் உருவாக்குகின்றனர்.
- கலந்துரையாடலில் பங்கேற்கின்றனர்.
- பாடப்பகுதியை வாசித்து காய்கறிகள் மற்றும் பழங்களின் பெயர்களை இனம் காண்கின்றனர்.
- செடியில் விளைபவை, கொடியில் விளைபவை எனக் காய்கறிகளை வகைப்படுத்துகின்றனர்.
- 'ஊ' வில் தொடங்கும் சொற்களைக் கூறுகின்றனர்.
- மரத்தை நம்பி வாழும் உயிரினங்களின் பெயர்களைப் பட்டியலிடுகின்றனர்.
- பயன்களின் அடிப்படையில் மரங்களை வகைப்படுத்துகின்றனர்.
- உயிரினங்களின் பெயர்களைக் கூறுகின்றனர்.
- உயிரினங்களை வீட்டில் வளர்ப்பவை, காட்டில் வாழ்பவை என வகைப்படுத்துகின்றனர்.
- படத்தைப் பார்த்துப் பெயர்களைக் கூறுகின்றனர்.
- 'ே , ெ' குறியீடுகளைச் சொற்கள் வாயிலாக அடையாளம் காண்கிறார்கள்.
- ஒலித்துணைக் குறியீடுகளின் ஒலிப்பு முறையை அறிந்துக் கொள்கின்றனர்.
- வீட்டில் வளர்க்கும் உயிரினங்களின் பயன்களை எழுதுகின்றனர்.
- கதையைக் கேட்கின்றனர். கேட்ட கதையைப் படக்கதையுடன் ஒப்பிடுகின்றனர்.
- படக்கதையின் அடிப்படையில் கதையைத் தெளிவாகக் கூறுகின்றனர்.
- இதுவரை கற்ற எழுத்துக்களின் அடிப்படையில் உருவான வாசிப்பு பகுதியை பிழையின்றி வாசிக்கின்றனர்.

## இவ்வலகின் வாயிலாக...

**அறிமுகமாகும் எழுத்துகள்**

பூ, உ, ஊ, தொ, வெ, ண், பெ, செ, சே, கோ, கு, ழு, தோ, ன், று

**அறிமுகமாகும் சொற்கள்**

தொட்டு, தோட்டம், பட்டாம்பூச்சி, பூ, பூக்கள், சிவப்பு, பச்சை, வாசம், உண்டு, கண்டு, ஊஞ்சல், ஊசி, மஞ்சள், நீலம், காய்கறிகள், விலங்குகள், பறவைகள், கன்று.

## கற்றல் துணைக் கருவிகள்

- பூக்கள், காய்கறிகள், பழங்கள், பறவைகள், விலங்குகள் அடங்கிய படங்கள், அச்சுகள், பட / எழுத்து அட்டைகள்.

## அலகு வலைச்சட்டம்

**நிகழ்வு – 1**
**பூந்தோட்டம்**

## ஆயத்தச் செயல்பாடு

காகிதத்தில் பூக்கள் செய்யலாம்

குழந்தைகளுடன் சேர்ந்து வண்ணக் காகிதத்தை வெட்டி, பல விதமான பூக்களையும் பட்டாம்பூச்சிகளையும் செய்து வகுப்பறையின் ஒரு பகுதியைப் பூந்தோட்டமாக மாற்றுங்கள் அல்லது ICT பயன்படுத்திக் காண்பிக்கலாம்.

### கதையோட்டம்

அப்பா... அப்பா... கோடை விடுமுறை தானே, சிண்டுவையும் என்னையும் பூங்காவிற்கு அழைத்துச் செல்லுங்கள். என்றது மண்டுப்பூனை. "சரி, நாளையே தயாராகுங்கள்" என்றார் சிண்டுவின் அப்பா. சிண்டுப்பூனையும், மண்டுப்பூனையும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தன. மறுநாள் பூங்காவிற்குச் சென்றன. பூங்காவைப் பார்த்த சிண்டுவும் மண்டுவும் பிரமித்து நின்றன. ஆகா! என்ன அழகான பூந்தோட்டம். வண்ண வண்ண மலர்கள், வாசம் வீசும் மலர்கள், அடுக்கடுக்காக வரிசை வரிசையாக பூத்துக் குலுங்கும் காட்சி. கண்ணுக்கு இனிமையாக இருக்கின்றன என்றன. அவை பூந்தோட்டத்தில் விளையாடத் தொடங்கின. சில பூக்களில் பட்டாம் பூச்சிகள் வட்டமிட்டுப் பறந்தன. பட்டாம் பூச்சியைப் பார்த்த சிண்டுவும் மண்டுவும் அதன் பின்னே சென்றன. ஓடியாடி விளையாடின.

குழந்தைகள் கதைப் பகுதியைக் கவனித்தார்களா என்றறிய சில வினாக்களைக் கேளுங்கள்.

- சிண்டுப்பூனையும் மண்டுப்பூனையும் எங்கு சென்றன?
- சிண்டுவும் மண்டுவும் பூங்காவில் என்னென்ன பார்த்தன?
- அவை பூந்தோட்டத்தில் வேறு என்னென்ன பார்த்திருக்கும்?

சிண்டுவும் மண்டுவும் பூந்தோட்டத்தில் ஒரு பாடலைப் பாடிக் கொண்டே விளையாடின. அவைகளோடுச் சேர்ந்து நாமும் பாடுவோமா? என்று கேட்டுக் கொண்டே பாடப்புத்தகத்திற்குள் நுழையுங்கள்.

## செயல்பாடுகள்

### 1. பாடலுக்கு மெட்டமைத்தல்

**நோக்கம்: பாடலைப் பல்வேறு மெட்டுகளில் பாடுதல்**

பாடலை ஆசிரியர் குறிப்பிட்ட மெட்டில் பாடிய பின்னர் பல்வேறு மெட்டுகளில் குழந்தைகள் குழுவாக பாடட்டும். பின் தனித்தனியாகவும் பாடி மகிழட்டும். ஒரு குழுப் பாடும் போது பிற குழுக்கள் கேட்கட்டும். எந்தக் குழுச் சிறப்பாகப் பாடியது என்பதை குழந்தைகள் கண்டுப்பிடிக்கட்டும். மதிப்பீடு செய்து, மதிப்பீட்டுப் பதிவேட்டில் குறிக்க வேண்டும்.

### 2. சொற்களை வட்டமிடுங்கள் வாசியுங்கள்

**நோக்கம்: மாணவர்கள் கற்ற சொற்களை இனங்காணுதல் மற்றும் வட்டமிடுதல்**

பாடப்பகுதியில் வரும் சொற்களான பட்டு, தொட்டு, பட்டாம்பூச்சி, பூ, உண்டு, கண்டு என்ற சொற்களை வைத்து சொல் அட்டை உருவாக்கி அதை வாசிக்கச் செய்யுங்கள். பின் அந்தச் சொற்களைப் பாடப்பகுதியில் எந்த இடத்தில் வந்துள்ளது என இனங்கண்டு அச்சொற்களைச் சுற்றிலும் குழந்தைகளை வட்டமிடச் சொல்லுங்கள். வட்டமிட்டச் சொல்லைக் குழந்தைகள் தமது குறிப்பேட்டில் எழுதட்டும்.

### 3. முதல் எழுத்தை வட்டமிடுதல் வாசித்தல்

**நோக்கம்: சொல்லின் முதல் எழுத்தை அடையாளம் கண்டு வட்டமிடுதல்**

பட்டாம்பூச்சி, பட்டாம்பூச்சி பட்டாம்பூச்சியே
வண்ண உடை உடுத்தி வரும் பட்டாம்பூச்சியே
பூக்களில் தேனை உண்ணும் பட்டாம்பூச்சியே
பூக்கள் போல புன்சிரிக்கும் பட்டாம்பூச்சியே

ஆசிரியர் இந்த வரிகளை விளக்க அட்டையில் எழுதி வகுப்பறையில் வெளியிடுங்கள். வாசிப்பு உத்திகளின் அடிப்படையில் வாசியுங்கள். 'உ' முதல் எழுத்தாக வரும் எத்தனைச் சொற்கள் உள்ளன? 'பூ' முதல் எழுத்தாக வரும்

எத்தனைச் சொற்கள் உள்ளன? என்று கேளுங்கள். குழந்தைகளே கூறட்டும். முதல் தடவைக் கண்டுப்பிடிக்க முடியவில்லை எனில், மேலும் ஒரு முறை வாசியுங்கள். வாசிக்கும் போது சொற்களைத் தொட்டுக் காட்டி வாசியுங்கள். அதன்பிறகு முதல் எழுத்தைக் கண்டுப்பிடித்து வாசிக்கவும் வட்டமிடவும் செய்யட்டும். 'உ', 'பூ', 'டு' என்ற எழுத்துகளை இனக் கண்டுள்ளார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும். பாடப்பகுதியிலுள்ள செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்ய வேண்டும்.

### 4. 'உ' விலும் 'பூ' விலும் தொடங்கும் சொற்களைக் கண்டுபிடித்தல்

குழந்தைகள் இதுவரை கற்றச் சொற்களையும் இவ்வலகில் கற்றச் சொற்களையும் சார்ட்டில் எழுதுங்கள். குழந்தைகள் வாசிக்கட்டும். அதைத் தொடர்ந்து 'உ' வில் தொடங்கும் சொற்களையும் 'பூ' வில் தொடங்கும் சொற்களையும் கண்டுப்பிடித்து எழுதட்டும்.

### 5. பூக்களின் பெயர்களைக் கூறலாம்

**நோக்கம்: பூக்களை நிறங்களின் அடிப்படையில் வகைப்படுத்துதல்**

ஐ.சி.டி. பயன்படுத்தி பூக்களை ஆசிரியர் காண்பிக்க வேண்டும். வகுப்பறைக்குள் வரும் முன் ஆசிரியர் பூக்களைச் சேகரித்துக் கொண்டு வரவேண்டும். குழந்தைகளிடமும் கொண்டு வரச் சொல்லலாம். பூக்கள் அடங்கிய விளக்க அட்டையும் வகுப்பறையில் தொங்க விடவேண்டும். ஒவ்வொரு குழந்தைகளிடமும் பூவைக்காட்டி அதனுடைய பெயரைக் கூறச் சொல்லவும். பூவின் பெயர் தெரியாவிட்டால் வலையொளி உதவியை நாடலாம். பூவின் நிறத்தையும் குழந்தைகள் கவனிப்பார்கள் அல்லவா? குழந்தைகள் கூறும் பூக்களின் பெயரை ஆசிரியர் கரும்பலகையில் எழுத வேண்டும்.

ஓரிரு முறை ஆசிரியர் வாசித்துக் காட்டவும். பின் குழந்தைகள் வாசிக்க முயற்சிக்கட்டும். பின்பு விளக்க அட்டையிலுள்ள பூக்களை வண்ணங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி குழந்தைகள் எழுதட்டும்.

**சிவப்பு**
செம்பருத்தி
ரோஜா

**மஞ்சள்**
ஜாமந்தி
சூரியகாந்தி

**வெள்ளை**
மல்லிகைப் பூ
பிச்சிப்பூ
ரோஜா

**நீலம்**
சங்குப் பூ
அவரைப் பூ

### 6. வண்ணம் தீட்டலாம்

**நோக்கம்: பூக்களுக்கு வண்ணம் தீட்டி அழகுப்படுத்துதல்**

பாடப்புத்தகத்திலுள்ள பூக்களுக்கு வண்ணம் தீட்டி அழகுபடுத்த குழந்தைகளிடம் கூறவேண்டும். பொருத்தமான வண்ணங்களைத் தேர்ந்தெடுக்கிறார்களா? என்பதைக் கவனிக்க வேண்டும்.

**வண்ணம் தீட்டும் போது**

- புள்ளிகள் வழியாகப் படத்தைச் சரியாக வரைதல் வேண்டும்.
- பூக்களின் வெளியே நிறம் போகாமல் வண்ணம் தீட்ட வேண்டும்
- பொருத்தமான நிறங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

### 7. இணைத்து வாசித்தல் / எழுதுதல்

**நோக்கம்: மாணவர்கள் கற்ற எழுத்துகளை இணைத்து சுதந்திரமாக சொற்களை உருவாக்குதல்.**

குறிப்பிட்ட எழுத்துகளை இணைத்து புதியச் சொற்களைத் தகுந்த கட்டங்களில் எழுதட்டும். எழுதியதை உரக்க வாசிக்கட்டும்.

### 8. கூறுங்கள்

**நோக்கம்: படத்தை உற்றுநோக்கி எழுதுதல்**

பாடப்புத்தகத்திலுள்ள 34 ஆம் பக்கத்திலுள்ள படத்தைக் குழந்தைகள் உற்று கவனிப்பதற்குநேரம் கொடுக்க வேண்டும். பின்பு பா.நூ. பக்கம் 37 ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளைக் கேளுங்கள். குழந்தைகள் கூறும் பதிலை ஆசிரியர் கரும்பலகையில் எழுத வேண்டும். குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள். நான்காவது வினாவிற்குக் குழந்தைகள் தமது கருத்துகளை ஊகித்து கூறவேண்டும்.

**நிகழ்வு: 2**

**வெள்ளைப்பசுவின் தோட்டம்**

## ஆயத்தச் செயல்பாடு

குண்டு குண்டு கத்தரிக்காய்
குலை குலையாய் முந்திரிக்காய்
கொத்து கொத்து அவரைக்காய்
கொடியில் தொங்கும் சுரைக்காய்
கொம்பில் தொங்கும் கொய்யாக்காய்
பாம்பு போன்ற புடலங்காய்
நீண்டு தொங்கும் முருங்கைக்காய்

நிலத்தில் கிடக்கும் பரங்கிக்காய்
விரலைப் போன்ற வெண்டைக்காய்
விரும்பி உண்ணு நன்மைக்காய்

பாடலை அனைவரும் சேர்ந்துப் பாடிய பின்னர் கதையோட்டத்தைச் சுவைப்படக்கூறுங்கள்.

## கதையோட்டம்

சிண்டுவிற்கும் மண்டுவிற்கும் பூந்தோட்டம் மிகவும் பிடித்திருந்தது. "சிண்டு, நாம் இரண்டு பேரும் நம் வீட்டைச் சுற்றி ஒரு பூந்தோட்டம் அமைக்கலாமா? என்று மண்டு கேட்டது. சிண்டு சம்மதித்தது. சிண்டுவும் மண்டுவும் பூந்தோட்டம் அமைத்தன. ஒரு நாள் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கும் போது, சிண்டு....மண்டு.... என்று கூப்பிடும் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தன. வேலியின் வெளியே வெள்ளைப் பசு நின்றுகொண்டிருந்ததைக் கண்டு சிண்டுவும் மண்டுவும் பயந்தன. ஏய் பசுவே! நீ எங்கள் செடியை நாசப்படுத்தி விடாதே என்றன. "நான் அப்படி எல்லாம் செய்யமாட்டேன் எனக்கும் ஒரு பெரிய காய்கறித் தோட்டம் இருக்கிறது, வந்து பாருங்கள்" என்றது. சரிசரி வேறொரு நாள் வருகிறோம் என்று அவை கூறின. தாய்ப்பூனை சிண்டுவையும் மண்டுவையும் பால் வாங்கி வரும்படி கூறியது. ஆகா! பசுவின் காய்கறித் தோட்டத்தைப் பார்க்கலாமே! இரு பூனைகளும் வெள்ளைப் பசுவைப் பார்க்க வந்தன. வெள்ளைப் பசு காய்கறித் தோட்டத்தைக் காண்பித்தது. அருமையான காய்கறித்தோட்டம். விதவிதமாக காய்கறிகள். இரு பூனைகளும் காய்கறித்தோட்டத்தை வேடிக்கைப் பார்த்தன.

நாம் பாடியப் பாடலில் வந்துள்ள காய்கறிகள் வெள்ளைப் பசுவின் தோட்டத்தில் இருக்கிறதா? என்று பார்ப்போமா? என்று கூறிக்கொண்டே பாடப்புத்தகத்திற்குள் நுழையுங்கள்.

## செயல்பாடுகள்

### 1. உற்றுநோக்குதல்

**நோக்கம்: மாணவர்களைப் படத்தை உற்று நோக்கச் செய்தல்**

படத்தை உற்றுக் கவனியுங்கள். நாம் கற்ற பாடலில் உள்ள காய்கறிகள் படத்தில் இருக்கிறதா? என்று பாருங்கள் எனக் கூறுங்கள். குழந்தைகள் பார்த்து காய்கறிகளின் பெயர்களைச் சுதந்திரமாகக் கூற வாய்ப்பளியுங்கள்.

### 2. பாடலுக்கு மெட்டமைத்தல்

**நோக்கம்: பாடலை மெட்டமைத்து பாடுதல்**

பாடலை ஓரிரு முறை இராகத்துடன் பாடுங்கள். அதன்பின் குழந்தைகள் குழுவாகவும் தனியாகவும் பாடட்டும். பாடலிலிருந்து ஆசிரியர் சில கேள்விகளைக்

கேட்க வேண்டும். குழந்தைகள் விடையைக் கண்டுபிடித்து கூறட்டும். பாடலுக்குக் குழந்தைகள் புதிய மெட்டமைக்கட்டும். மதிப்பீடு செய்ய வேண்டும்.

## 3. வட்டமிடுங்கள்

**நோக்கம்: கற்ற சொற்களை வேறுபடுத்தி அறிதல்.**

பாடப்புத்தகத்திலுள்ள காய்கறிகளின் பெயர்களை வட்டமிடுங்கள் என்று கூறுங்கள்.

பாடப்புத்தகத்திலுள்ள பழங்களின் பெயர்களை வட்டமிடுங்கள் என்று கூறுங்கள்.

காக்கை காக்கை கருப்பு நிறம்
நோக்கும் வானம் நீல நிறம்
ஆப்பிள் பழமோ சிவப்பு நிறம்
தோப்புக் கிளிகள் பச்சை நிறம்
சூரிய காந்தி மஞ்சள் நிறம்
பசுவின் பாலோ வெள்ளை நிறம்

'ஊதா' என்ற சொல்லைக் கண்டுபிடித்து வட்மிடுங்கள் என்று கூறுங்கள்.

குறிப்பிட்ட சொற்களை இனம் காணட்டும். குறிப்பிட்ட சொல்லிலிருந்து எழுத்தை இனம் காணட்டும்.

## 4. பெயர் எழுதுவோம்

**நோக்கம்: காய்கறிகள், பழங்கள் முதலியவற்றைப் பட்டியலிடுதல்**

குழந்தைகள் அவர்களுக்குத் தெரிந்த காய்கறிகளின் பெயர்களை கூறட்டும். அவைகளைக் கரும்பலகையில் எழுதுங்கள். ஓரிரு முறை வாசித்துக் காண்பியுங்கள். பின்பு குழந்தைகளுக்கு வாசிக்க வாய்ப்பளியுங்கள். நாம் ஒவ்வொருவருடைய பள்ளியிலும் காய்கறி அச்சு இருக்கிறதல்லவா? அதை குழந்தைகளின் நோட்டுப் புத்தகத்தில் அச்சு பதித்து கொடுங்கள். குழந்தைகள் அவற்றிற்கு நிறம் கொடுத்து அதன் பெயரை படத்திற்குக் கீழே எழுதட்டும்.

(தங்களுக்குப் பிடித்த காய்கறிகளையும் பழங்களையும் வரைந்து நிறம் கொடுக்கச் சொல்லுங்கள்.)

## 5. வகைப்படுத்துதல்

**நோக்கம்: செடியிலும் கொடியிலும் விளையும் காய்கறிகள் உள்ளன என்பதையறிதல்**

இச்செயல்பாட்டைக் களப்பயணமாகவும் செய்யலாம். பலவித காய்கறிகளின் விளைச்சல் முறையை ICT வாயிலாகவும் காண்பிக்கலாம். காய்கறிகளின் விளைச்சல் முறையினை நேரிலோ ICT வாயிலாகவோ பார்த்த குழந்தைகள் காய்கறிகளின் பெயரினைக் கூற, அது செடியிலா? கொடியிலா? மரத்திலா? என்பதைக் கூறட்டும். இதை இரு குழுக்களாகப் பிரித்து விளையாட்டின் வாயிலாகவும் உறுதிப்படுத்தலாம்.

முதல் குழு : கத்தரிக்காய் என்று கூற
இரண்டாம் குழு : செடியில் என்று கூற வேண்டும்.

அவ்வாறு விளையாட்டுத் தொடர வேண்டும். அதன்பிறகு பாடப்புத்தகத்திலுள்ள செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

## 6. பெயரைச் சொல்லுங்கள்

**நோக்கம்: 'ஊ' என்ற எழுத்தை உறுதி செய்தல்.**

பாடப் புத்தகத்தில் உள்ள படங்களின் பெயர்களைக் கூறச் சொல்லுங்கள். 'ஊ' என்ற ஓசையை குழந்தைகள் உணரட்டும். 'ஊ' வில் தொடங்கும் இன்னும் அதிகம் பொருட்களைக் கூறச் சொல்லுங்கள்.

ஊதல், ஊதா, ஊஞ்சல், ஊசி

## 7. அடிக்கோடிடுங்கள்

**நோக்கம்: மாணவர்கள் 'ஊ' என்ற எழுத்தை அடையாளம் காண்கிறார்களா? என உறுதிப்படுத்துதல்.**

பாடப்புத்தகத்தில் வரும் வாசிப்புப் பகுதியில் குறிப்பிட்ட எழுத்தின் அடியில் கோடு போடச் சொல்லுங்கள். பின்பு அதற்கு அடுத்த செயல்பாடான 'வட்டமிடுதல்' என்பதைக் குழந்தைகள் செய்ய ஊக்கப்படுத்துங்கள். சரியாக கண்டுபிடித்தால் பாராட்டுங்கள்.

## 8. பட்டியலிடுவோம்

**நோக்கம் : மரங்களின் பயன்களை அறிதல்**

ஐசிடி பயன்படுத்தி மரங்களையும் மரத்தை நம்பி உயிர் வாழும் உயிரினங்களையும் காட்டுங்கள். அவைகளின் பெயர்களைக் குழந்தைகள் கூறட்டும். உயிரினங்களின் அச்சு இருப்பின் நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து கொடுங்கள். குழந்தைகள் அவற்றின் பெயர்கள் எழுதட்டும்.

குருவி, கிளி, குரங்கு, அணில்,ஆந்தை

## 9. எத்தனை எத்தனை மரங்கள்

**நோக்கம்: பல்வேறு மரங்களையும் அவற்றின் பயன்களையும் தெரிந்துகொண்டு பட்டியலிடச் செய்தல்**

குழந்தைகள் தங்களுக்குத் தெரிந்த மரங்களின் பெயரைக் கூற ஆசிரியர் அதைக் கரும்பலகையிலோ விளக்க அட்டையிலோ எழுதி வகுப்பறையில் தொங்கவிட வேண்டும். குழந்தைகளை இருவர் குழுக்களாக்குங்கள். அதன்பின் "எல்லா மரங்களும் பழம் தரும்" இக்கூற்று சரியா? தவறா? என்று கேளுங்கள். குழந்தைகள் தங்கள் குழுக்களில் கலந்துரையாடி கண்டுபிடிக்கட்டும். தரப்பட்டுள்ள மரங்களின் பெயரை அலசி ஆராய்ந்துக் கண்டுபிடிக்கட்டும்.

அதன்பின் பாடப்புத்தகச் செயல்பாட்டைக் குழந்தைகள் செய்யட்டும். குழுச் செயல்பாட்டை மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும்.

| பழம் தரும் மரங்கள் | பிற பயன் தரும் மரங்கள் |
|---|---|
| மாமரம் | அரச மரம் |
| கொய்யா மரம் | இரப்பர் மரம் |
| நாவல் மரம் | ஆல மரம் |
| ஆரஞ்சு மரம் | தேக்கு மரம் |
| ஆப்பிள் மரம் | ஈட்டி மரம் |
| பலா மரம் | முருங்கை மரம் |

**நிகழ்வு – 3**
**புள்ளிக்கன்று**

## ஆயத்தச் செயல்பாடு

குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டைச் சொல்லிக்கொடுங்கள். 'கொக்கு பற பற' விளையாட்டு. பறவைகள் பெயரைக் கூறும் போது பறப்பது போல் கையசைத்து பறபற என்று குழந்தைகளைச் சொல்ல வைக்க வேண்டும். விலங்குகளின் பெயரைக் கூறும் போது நட, நட என்று நடந்துகாட்ட வேண்டும். ஆசிரியர் பறவைகளின் பெயரையும் விலங்குகளின் பெயரையும் மாறிமாறி வேகமாகக் கூற வேண்டும். தவறாக செய்த குழந்தைகள் விளையாட்டிலிருந்து வெளியேற வேண்டும். அதைத் தொடர்ந்து கதையோட்டத்தைச் சுவைபடக் கூறுங்கள்.

### கதையோட்டம்

சிண்டுவும் மண்டுவும் வெள்ளைப்பசுவின் வீட்டிலிருந்து பால் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தன. ஏன் இவ்வளவு நேரம்? என்று தாய்ப்பூனை கேட்டது. அதுவா! அம்மா... வெள்ளைப்பசுவின் வீட்டில் மிகப்பெரிய காய்கறித்தோட்டம், காய்கறிகள் காய்த்துத் தொங்கின. பார்க்கவே அவ்வளவு அழகாக இருந்தது தெரியுமா!. பிரமித்துப் போய் நின்றுவிட்டோம் அம்மா, என்றன. சிண்டுவும் மண்டுவும் வெள்ளைப்பசுவும் நண்பர்களாயின. மறுநாள் வெள்ளைப்பசு, சிண்டுவின் வீட்டிற்கு வந்தது. அன்புடன் விசாரித்த அவை பசுவை உபசரித்தன. என்னுடைய மகன் கன்றுக்குட்டிக்கு நாளை பெயர் சூட்டும் விழா நடைபெறுகிறது. நீங்கள் கண்டிப்பாக வரவேண்டும் என்று சிண்டுவின் குடும்பத்தினரை அழைத்தது வெள்ளைப்பசு. கண்டிப்பாக வருவோமென்று சிண்டு குடும்பத்தினர் கூறினார்கள். மறுநாள் சிண்டுவும் மண்டுவும் தாய்ப்பூனையும் வெள்ளைப்பசுவின் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கே விருந்தினர் பலரும் வந்திருந்தார்கள். பெயர் சூட்டும் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

கதையோட்டத்தின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள். பெயர் சூட்டும் விழாவிற்கு யாரெல்லாம் வந்திருப்பார்கள்?

## செயல்பாடுகள்

### 1. வாசித்தல்

**நோக்கம்: பாடப்பகுதியை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்**

பாடப்பகுதியைச் சுவைப்பட ஆசிரியர் நிறுத்தி நிதானமாக வாசிக்க வேண்டும். ஓரிரு முறை வாசித்தல் நன்று. குழந்தைகள் கவனிக்கிறார்களா என்றறிய இடையிடையே கேள்விகள் கேட்க வேண்டும். விலங்குகளின் பெயர்கள் விடையாக வரும் கேள்விகளைக் கேளுங்கள். விடையாக வரும் பெயரைக் குழந்தைகள் தொட்டு காண்பிக்க வேண்டும்.

விருந்தினரை வரவேற்றது யார்?

- பூச்சரம் தந்தது யார்?
- ஆரஞ்சு தந்தது யார்?
- கொள்ளு தந்தது யார்?

### 2. வட்டமிடுதல்

**நோக்கம்: மாணவர்கள் பாடப்பகுதியை வாசித்து விலங்குகளின் பெயரை வட்டமிடுதல்**

பாடப்பகுதியைக் குழந்தைகள் சுதந்திரமாக வாசிக்க வாய்ப்புக் கொடுங்கள். பாடத்தில் வரும் விலங்குகளின் பெயரை குழந்தைகள் வட்டமிட வேண்டும். வட்டமிட்ட பெயர்களைத் தங்கள் குறிப்பேட்டில் எழுதட்டும். வாசிக்கத் தெரியாத குழந்தைகளுக்குப் படமும் சொல்லும் அட்டைகளைக் காண்பித்து, விலங்குகளின் பெயர்களைப் பார்த்து எழுதுவதற்கான வாய்ப்பளியுங்கள். இவ்வாறு வாசித்தும் இனம் கண்டும் விலங்குகளின் பெயர்களை எழுதட்டும்.

### 3. சொல்லுதல்

**நோக்கம்: விலங்குகளின் மற்றும் பறவைகளின் பெயர்களை அறிதல்**

பறவைகள், விலங்குகள் அடங்கிய விளக்க அட்டைகளை ஆசிரியர், வகுப்பறைக்குள் கொண்டு செல்லுங்கள். குழந்தைகளிடம் உங்களுக்குத் தெரிந்த விலங்குகளின் பெயரைக் கூறுங்கள் என்று சொல்லுங்கள். (குழந்தைகள் அவர்களுக்குத் தெரிந்த பெயரைக் கூறுவார்கள் அல்லவா!) பின் விளக்க அட்டையைக் காண்பியுங்கள் அவர்கள் சொல்லாத விலங்குகள் இருக்கிறதா? என்று கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். கூடுதல் விலங்குகளின் பெயர்களைக் குழந்தைகள் தெரிந்துக்கொள்ளட்டும்.

குழந்தைகள் கூறும் பெயர்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். வாசிக்கச் சொல்லுங்கள். பின்பு நோட்டுப் புத்தகத்தில் விலங்குகளின் அச்சுப் பதித்துக்

கொடுங்கள். அதற்கு வண்ணம் தீட்டி, விலங்குகளின் பெயர்களைக் குழந்தைகள் எழுதட்டும்.

இது போன்ற செயல்பாடு பறவைகளின் பெயர் எழுதவும் பயன்படுத்தலாம்.

குழந்தைகளிடம் உங்களுக்குப் பிடித்த விலங்குகளையும் பறவைகளையும் வரைந்து நிறம் கொடுத்துப் பெயர் எழுதுங்கள் என்று கூறுங்கள்.

நன்றாக வரைந்து நிறம் கொடுத்த குழந்தைகளைப் பாராட்டி நட்சத்திரம் கொடுக்கலாம்.

## 4. வகைப்படுத்துதல்

**நோக்கம்: விலங்குகளை வீட்டில் வளர்ப்பவை, காட்டில் வாழ்பவை என வகைப்படுத்தச் செய்தல்**

ஆசிரியர் விலங்குகளின் படங்களுடன் உள்ள சொல்லட்டையைச் சேகரித்துக் கொண்டு வரவேண்டும். அதை மேசையின் மீது வையுங்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு படங்களை எடுக்கட்டும். வீட்டில் வளர்க்கும் விலங்குகள் எடுத்த குழந்தைகளை ஒரு குழுவாக்குங்கள். காட்டில் வாழும் விலங்குகள் எடுத்த குழந்தைகளை மற்றொரு குழுவாக்குங்கள். ஒவ்வொரு குழுவும் தங்களது குழுவிலுள்ள விலங்குகளின் பெயரைக் கூறட்டும். அதை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி ஒருங்கிணைக்க வேண்டும். வீட்டில் வளர்க்கும் உயிரினங்கள், காட்டில் வாழும் உயிரினங்கள் இவற்றின் பெயர்களை உறுதி செய்தப் பின் வகைப்படுத்துதல் என்ற பாடப்புத்தகச் செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

## 5. படத்தைப் பார்த்து பெயரைச் சொல்லுதல்

**நோக்கம்: 'கோ', 'சே', 'செ' என்ற எழுத்துக்களை உறுதிப்படுத்துதல்**

'கோ', 'சே' செ' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களின் படங்களை ஆசிரியர் சேகரித்துக்கொண்டு வரவேண்டும். குழந்தைகள் வட்டத்தில் நிற்கட்டும். ஆசிரியர் நடுவில் நின்று, ஒரு குழந்தையை அழைத்து ஒரு படத்தைக் கொடுக்க வேண்டும். படத்தைப் பார்த்து குழந்தைகள் பெயரைக் கூற வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு குழந்தைகளையும் அழைத்து, படத்தில் உள்ள பெயரைக் கூற வாய்ப்பளியுங்கள். குழந்தைகள் கூற அப்பெயரைச் சொல்லிக்கொண்டே கரும்பலகையில் எழுதுங்கள். எழுதும் முறையை குழந்தைகள் காணுமாறு எழுத வேண்டும். ஒவ்வொரு ஒலித்துணைக் குறியீட்டையும் அதன் வேறுபாட்டையும் அறிந்தப்பின் அதைத் தொடர்ந்து பாடநூல் பக்கம் 44, 45 செயல்பாடுகளைக் குழந்தைகள் சுதந்திரமாகச் செய்யட்டும்.

## 6. வீட்டில் வளர்க்கும் உயிரினங்களின் பயன்களை எழுதுதல்

**நோக்கம்: உயிரினங்களின் பயன்களை அறிந்து கொள்ளுதல், எழுதுதல்**

ஒரு சில உயிரினங்களை நாம் வீட்டில் வளர்க்கிறோம் எதற்காக? என்று

குழந்தைகளிடம் கேளுங்கள். குழந்தைகளிடமிருந்தே பதில் வரட்டும். அவர்கள் சொல்லச்சொல்ல கரும்பலகையில் எழுதுங்கள். பாடப்புத்தகத்திலுள்ள செயல்பாட்டைக் குழந்தைகள் சுதந்திரமாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்

| | | |
|---|---|---|
| கோழி | – | இறைச்சி, முட்டை |
| பசு | – | பால் (தயிர், மோர், சாணம், உரம்) |
| வாத்து | – | இறைச்சி, முட்டை |
| ஆடு | – | இறைச்சி, பால், உரம் |
| பன்றி | – | இறைச்சி |
| எருமை | – | பால், இறைச்சி, உரம் (சாணம்) |

## 7. கதைநேரம் (தாகம் தணிந்த காகம்)

**நோக்கம்: கதைக் கூறும் திறன் பெறுவதற்கு , படம் பார்த்து கதை உருவாக்கும் திறனை உருவாக்குதல்**

குழந்தைகளுக்குக் கதை சொல்ல தெரியும் அல்லவா? பாடப்புத்தகத்தைக் கொடுத்து, ஒவ்வொரு குழந்தைகளுக்கும் பாடப்புத்தகத்திலுள்ள கதையைச் சுயமாக கூற வாய்ப்பளியுங்கள். குழந்தைகள் முயற்சி செய்யட்டும். அதன்பிறகு தாகம் தணிந்த காகத்தின் கதையைக் கூறுங்கள். குழந்தைகள் கதையைக் கேட்ட பின்பு படக்கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்கட்டும். அதன்பிறகு படக்கதையைப் பார்த்து கதையைக் கூறட்டும்.

## 8. பாடி மகிழ

**நோக்கம்: பாடலைப் பாடுதல்**

பாடலை ஓரிரு முறைப் பாடுங்கள். குழந்தைகள் கேட்கட்டும். அதன்பின் ஆசிரியர் பாட குழந்தைகள் தொடர்ந்துப் பாட வேண்டும். ஆசிரியரும் குழந்தைகளும் சேர்ந்துப் பாடுதல், குழுவாகப் பாடுதல், தனியாகப் பாடுதல் போன்றவற்றின் வாயிலாக பாடலைப் பாடவேண்டும். குழுக்களாகப் பிரிந்து குழந்தைகள் பாடலுக்குப் புதிய மெட்டமைக்கட்டும்.

## 9. வாசிக்கிறேன் கேளுங்கள்

**நோக்கம்: கற்ற சொற்களை நினைவுக் கூறுதவதற்கு**

குழந்தைகள் இதுவரைக் கற்ற எழுத்துக்களின் அடிப்படையில் உருவான வாசிப்புச் செயல்பாடே இது. எனவே, இச்செயல்பாட்டை அவர்களாகவே வாசித்து கூறச் சொல்லுங்கள். சரியாக நிறுத்தி பொருள் புரிந்து வாசித்து சொல்பவர்களைப் பாராட்ட வேண்டும்.